பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை 23 .07.2023 கதிர் 254

வடக்கு - கிழக்கு

## தமிழ் எம்.பிக்களுடன் மீண்டும் ஜூலை 26 ஜனாதிபதி சந்திப்பு

அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது

ந.லோகதயாளன்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதிக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ஜூலை 26 மீண்டும் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதற்கான அழைப்பு ஜனாதிபதி செயலகத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய கையோடு இந்தச் சந்திப்புக்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஜூலை 20 இந்தியா புறப்படுவதற்கு இரு நாள்கள் முன்பாக இதுபோன்று வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்திருந்தார்.

அந்தச் சந்திப்பில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தனது "அதிகாரப் பகிர்வுத்" திட்டத்தை அவர் முன்வைத்தார். மத்தியால் கையகப்படுத்தப்பட்ட மாகாணங்களின் அதிகாரங்களைத் திரும்ப வழங்குவதற்கும் தான் தயார் என்றார். அதனைச் ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்துடன் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடக்கும் என்கிற எதிர்பார்ப்பு அரசியல் கட்சிகள் மத்தியில் தீவிரமடைந்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே நடக்கும் என்பதால் அதற்கு முன்பாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்புகள் இருப்பதாகக் கட்சிகள் கருதுகின்றன. இதனால், அந்தத் தேர்தல்களுக்குத் தயார்ப்படுத்திக்கொள்வதில் அவை முனைப்புக் காட்டத் தொடங்கியுள்ளன.

தற்போதைய ஆட்சியில் பங்கெடுத்திருக்கும் முக்கியஸ்தர்கள் பலர் கடந்த வாரமே - ரணில் இந்தியா புறப்படுவதற்கு முன்பாகவே - தத்தமது மாகாணங்களுக்குச் சென்று அங்குள்ள முன்னாள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைச் சந்தித்து அவசரமான மாகாண சபைத் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

முன்னர் மொட்டுக் கட்சியில் ☞2

## மீசாலையில் ரயில் மோதி வயோதிபர் சாவு



மீசாலை, புத்தூர் சந்திக்கு அருகாமையில் தொடருந்துடன் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். மாவட்டம், தென்மராட்சிப் பகுதியிலுள்ள மீசாலை கிழக்கை சேர்ந்த செல்லையா பரமசாமி (வயது 68) அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ☞2

## மக்களிடம் உண்மைக் கூறியே பிரச்சினையைத் தீர்ப்போம்

ஜே.வி.பி. தெரிவிப்பு

'நாம் ஆட்சியைக் கைப்பற்றினால் முதலில் செய்வது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது. அது இந்த ஆட்சி செய்யாத வேலை. அதேவேளை, நாம் மக்களிடம் சென்றே - உண்மையைக் கூறியே பிரச்சினையைத் தீர்ப்போம். வெளிநாட்டு முதலீட்டார்களை வரவைப்போம். அவர்கள் முதலீடு செய்வதற்காக அவர்களிடம் இலஞ்சம் வாங்கமாட்டோம்'

இவ்வாறு ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானசுனில்ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலேசியாவில் பொருளாதாரப் பிரச்சினை வந்தபோது அந்நாட்டுப் பிரதமர் மஹாதீர் முஹம்மட் சொன்னார் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னால் சர்வதேச நாணயநிதியத்திடமும் செல்ல முடியும். மக்களிடமும் செல்ல முடியும் என்று. இறுதியில் அவர் மக்களிடமே சென்று பிரச்சினையைத் தீர்த்தார்.

இலங்கையின், இன்றைய ஆட்சியாளர்களால் அப்படி மக்களிடம் செல்ல முடியாது. நாம் மக்களிடம் சென்றே - உண்மையைக் கூறியே பிரச்சினையைத் தீர்ப்போம். வெளிநாட்டு முதலீட்டார்களை வரவைப்போம். அவர்கள் முதலீடு செய்வதற்காக அவர்களிடம் இலஞ்சம் வாங்கமாட்டோம்.

இன்று நடப்பது இதுதான். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஷங்கிரிலா, ஹில்டன் ☞2

## வலி. வடக்கு முகாம் பகுதிக்குள் வாகனங்களுடன் புகுந்து திருட்டு

உரிமையாளர்கள் அந்தரிப்பு; அதிகாரிகள் கைவிரிப்பு



வலி. வடக்கில் முகாம் பகுதிகளாக இருந்து படையினரால் விடுவிக்கப்படவுள்ள இடங்களில் திருட்டு அதிகரித்திருப்பதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். பட்டப்பகலில் வாகனங்களில் வரும் திருடர்கள். வாகனத்தை மரங்களடர்ந்த பகுதிகளில் மறைத்து நிறுத்திவிட்டு, பற்றைகள் மண்டியுள்ள இடங்களில் உள்ள வீடுகளில் தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள், ஓடுகள், பலகைகள், மரங்கள் என்பவற்றைத் திருடிச் செல்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி 30 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. போர் முடிந்த பின்னர் இந்தப் பகுதிகளில் கணிசமானவை மக்களிடம் திரும்பக் ☞2

## மரம் முறிந்து விழுந்து இருவர் பரிதாபச் சாவு




மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் அம்பலாங்கொடை - அக்குரஸ்ஸ பகுதியில் நேற்று (22) இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வீசிய கடும் காற்றால் மரமொன்று முறிந்து வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தின் மீது விழுந்ததில் இருவர் ☞2

## சர்வதேச சமூகத்தின் தலையீடின்றிய எந்தப் பொறிமுறையும் பயனற்றது

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அறிக்கை

நிலைமாறுகால நீதியை முன்னிறுத்தி ஆட்சியாளர்களால் முன்மொழியப்படும் எந்தவொரு பொறிமுறையும் ஐக்கியநாடுகள்சபைஉள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நேரடித் தலையீடின்றி பயனுடைய மற்றும்செயற்திறனானபொறிமுறையாக அமையாது.

இவ்வாறுதனதுஅறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்கிற அமைப்பு.

இன்றைய ஆட்சியாளர்களினால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான யோசனையை மறுபரிசீலனைசெய்யுமாறும் இக்குழுசர்வதேசசமூகத்திடம் வலியுறுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ளஉண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் 16 சிவில்சமூக அமைப்புக்களை உள்ளடக்கியவடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புகுழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் ஆட்சிபீடம் ஏறிய பெரும்பான்மையின சிங்கள பௌத்த சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகள் சிறுபான்மையின சமூகங்களுக்கு எதிராக தொடர்ந்தும் இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

வடக்கு, - கிழக்கு மாகாணங்களில் சிங்கள குடியேற்றங்கள், மொழியுரிமை மீறல், தமிழ் ☞2

## மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல் அரசியல் கைதிகள் 2 பேர் விடுதலை

இலங்கை மத்திய வங்கி மீது 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட இரு தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

200 வருடங்கள் மற்றும்ஆயுள்தண்டனைவழங்கித் தீர்பளிக்கப்பட்டிருந்த இருவருக்கே மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

செல்லையாநவரட்ணம், சண்முகரட்ணம் சண்முகராஜா ஆகிய இரு தமிழ் அரசியல் கைதிகளுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் ஜூலை18 விடுதலைசெய்யப்பட்டனர்.

மத்திய வங்கி மீதான குண்டுத்தாக்குதல்தொடர்பில் 200வருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த செல்லையா நவரட்ணம் தனது 69ஆவது வயதில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டசண்முகரட்ணம் சண்முகராஜாவிற்கு விடுவிக்கப்படும்போது வயது 56. மத்திய வங்கித் தாக்குதலிற்காக விடுதலைப் ☞2

## கறுப்பு ஜூலையின் 40ஆவது நினைவு நாள்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களால் 1983 இனக் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டதன் 40ஆவது நினைவு நாள் இன்று.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இலங்கைத் தரைபடையினர் பயணித்த வாகனம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு, கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன. அதைத்தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன.

இறுதிக் கிரியைகளுக்காகப் பெருமெடுப்பில் திரட்டப்பட்டிருந்த பௌத்த சிங்களவர்கள்தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தில் ஈடுபட்டனர். இதற்குதிட்டமிட்ட வகையில் இலங்கையின் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் ஆதரவும் அனுசரணையும் வழங்கினார்கள். அதே கட்சியின் தற்போதைய தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே இன்று அரசுத் தலைவராகப் பதவியில் அமர்ந்திருக்கின்றார்.

தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள்கொழும்பில்தான் தொடங்கின என்றாலும் விரைவிலேயே நாடு முழுவதும் பரவின. தமிழர்களின் வீடுகள், கடைகள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன. கலவரக்காரர்களின் கைகளில் வாக்காளர்கள் பட்டியல்இருந்தது. அவற்றின் அடிப்படையில் அவர்கள் தமிழர்களின் வீடுகளைத் தேடித் தேடி தாக்கினார்கள். பெரும்பாலான நகரங்களில் இருந்த தமிழர்களின் பெருவர்த்தகங்கள், கடைகள் கலவரத்தின் பெயரால் தாக்கிச் சூறையாடப்பட்டன. அவற்றில்பெரும்பாலானவை மீண்டெழவே இல்லை.

7 நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற கலவரங்களில் தமிழர்கள்உயிருடன்கொழுத்தப்பட்டார்கள். நிர்வாணமாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்கள், அடித்துக் கொல்லப்பட்டார்கள், கொள்ளையடிக்கப்பட்டார்கள், கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் இருந்த வடக்கு கிழக்கை நோக்கி விரட்டப்பட்டார்கள். இவை அனைத்தையும் இலங்கை காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர். கலவரக்காரர்களைத் தடுத்து நிறுத்த அவர்கள் எந்தவித நடவடிக்கைகளையும் ☞2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களானவர்களும் தற்போது ரணில் தலைமையிலான ஆட்சியுடன் நெருக்கமாகச் செயற்படுபவர்களுமான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தமது ஆதரவாளர்களான உள்ளூராட்சி உறுப்பினர்களைத் தேர்தலுக்குத் தயாராகுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த அவரச தேர்தலை எதிர்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மொட்டுக் கட்சியில் இருந்து இப்போது ஆளும் தரப்புடன் அதாவது ரணிலுடன் நெருக்கமாகச் செயற்படும் - ஆதரவு வழங்கி வரும் - அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமைச்சர்களான சுசில் பிரேமஜெயந்த, அனுர பிரியதர்சனயாப்பா, பிரசன்ன ரணதுங்க, நிமல் லன்ஸா போன்றோர் மொட்டில் இருந்து பிரிந்து தனித்துச் செயற்படுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்கும் அதனூடாக மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்குமான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிவருகின்றனர். இவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட மொட்டுக் கட்சியைவிட்டு வெளியேறிவிட்டார்கள். இப்போது புதிய கூட்டணியை அமைப்பதற்கான தீவிர பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மொட்டுக்கட்சியின் மாகாண மற்றும் உள்ளூராட்சி முன்னாள் உறுப்பினர்களையும் பிரித்தெடுத்து தம்மோடு சேர்த்துக்கொண்டு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதுதான் அவர்களின் திட்டம். இந்தப் புதிய கூட்டணியில் மொட்டுக் கட்சியின் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை இணைந்துகொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வரப்போகும் இந்தப் புதிய கூட்டணிக்கான புதிய அலுவலகம் ராஜகிரியவில் தொடங்கப்பட்டுள்ளது. லேக்ட்ரைவ் ஏரியாவில் சத்தம் சந்தடியற்று இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் ஆளும் தரப்புக்குள் மாகாண சபைத் தேர்தலுக்கான முனைப்புக்கள் காட்டப்பட்டிருப்பதைத் தொடர்ந்து மற்றைய கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான தமது வியூகங்கள் குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. அனேகமாக ஜூலை 26 நடக்கவுள்ள தமிழ்க் கட்சிகள் - ஜனாதிபதி சந்திப்பில் இந்த விடயம் குறித்து அறிவிப்பு அல்லது சமிக்ஞைகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுத்துவதற்குத் தேவையான நாடாளுமன்ற சட்டவரைவுகளைத் தனது ஆட்சி விரைவிலல் முன்வைக்கும் என்றார்.

மாகாண சபைகள் சட்டங்களில் காணப்படும் ஒருங்கு நிரல் (பொது நிரல்) ஒழிக்கப்பட்டு அதிலிருக்கும் பெரும்பாலான விடயங்கள் மாகாண சபைகள் நிரலில் சேர்க்கப்படும் என்றார். இதற்காக மாகாண சபைகள் தொடர்பான புதிய சட்டங்களை ஆக்குவதற்கும் தான் தயார் என்றார். இறுதியாக அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடனும் அரசமைப்புத் திருத்தத்தைமேற்கொள்ளவும் தான் தயார் என்றும் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புடன் இந்தியா சென்ற ரணில், அங்கு இந்தியப் பிரதமர் மோடியிடமும் தனது இந்தத் திட்டத்தையே அதிகாரப் பகிர்வுக்கான திட்டமாகத் தெரிவித்திருந்தார். இந்தச் சந்திப்பில் தமிழர்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்றும் வாக்குறுதியளிக்கப்பட்டபடி 13ஐ நிறைவேற்றும் என்றும் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடக்கும் என்றும் தமிழ் மக்கள் மரியாதையுடனும் கண்ணியமாகவும் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்படும் என்றும் இந்தியா எதிர்பார்க்கின்றது என்று மோடி அறிவித்தார்.

இந்தியாவில் இருந்து ஜூலை 21 இரவு நாடு திரும்பிய ரணில், உடனடியாகவே வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜூலை 26 சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## மீசாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்ற அவரை கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த தொடருந்து மோதித்தள்ளியது.

மீசாலை புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## மக்களிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹோட்டல்களுக்குப் பணப் பெட்டியுடன் சென்று அமைச்சின் செயலாளர்களை எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். இலஞ்சம் கொடுப்பதற்காக அவர்கள் இவ்வாறு நடக்கின்றார்கள். எமது ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்காது.

பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் பற்றி ஆய்வு செய்வோம். பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இலங்கையைப்போல் வரிகள் அதிகம் உள்ள நாடுகள் எங்கேயும் இல்லை. இலங்கையைப்போல் மது வரி அதிகம் உள்ள நாடுகளும் எங்கும் இல்லை. அதேபோல், இலங்கையைப்போல் மக்களால் வாழ முடியாத நாடுகளும் எங்கும் இல்லை.

மது வரியை வைத்தே நாட்டை முன்னேற்றலாம். அந்தளவு அதிகமாக மது வரி இங்கு அறவிடப்படுகின்றது - என்றார். (02)

## வலி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப் பட்டன. இன்னும் 3 ஆயிரம் ஏக்கரல்



நிலம் படையினர் வசம் இருக்கின்றன. முகாம் பகுதிகள் என்ற பெயரில் இவற்றை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படையினர், அதில் மேலும் சில பகுதிகளை மக்களிடம் மீளக் கையளிக்கும் நோக்கத்துடன் தமது நிலைகளைப் பின்னகர்த்தி, அங்கிருந்த தமது முகாம்களை அகற்றி வருகின்றனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட



காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதி மற்றும் தெல்லிப்பழை தென்மயிலை பகுதி ஆகிய இடங்களில் இருந்து இராணுவத்தினர் அகன்றுவருகின்றனர். படையினர் அந்த இடங்களை விட்டு அகன்றபோதும், அவை இன்னும் முகாம் பகுதிகளாக முட்கம்பி வேலிகளுக்குள்ளேயே இருக்கின்றன. இதனால் பொது மக்கள் அங்கு சென்றுவர முடியாது.

குறித்த பகுதிகளை மாவட்ட செயலரிடம் உத்தியோகபூர்வமாக தாம் கையளித்த பின்னரே காணி உரிமையாளர் காணிக்குள் பிரவேசிக்க முடியும். காணி உரிமையாளர்கள் உயர்பாதுகாப்பு வலய முட்கம்பி வேலிக்கு வெளியே நின்று தமது காணிகள் எப்போது கையளிக்கப்படும் என்று ஏக்கத்தோடு பார்த்துவரும் நிலையில், திருடர்கள் அந்தப் பகுதிகளுக்குள் புகுந்து அங்கு உருப்படியாக உள்ள வீடுகளில் கிடைத்தவற்றைச் சூறையாடிச் செல்கிறார்கள்.

முகாம் பகுதி வேலிக்கு உள்ளேயே வாகனங்களுடன் செல்லும் திருடர்கள் பொருள்களைத் திருடி வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தப்பிச் செல்கின்றனர் என்று காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் , கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவித்த போது , குறித்த பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதி , அப்பகுதிகளை இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னரே தாம் அப்பகுதிக்குள் செல்ல முடியும் என்று கையை விரிக்கின்றனர் என்றும் காணி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அது தொடர்பில் இராணுவத்தினிடம் முறையிடத் தாம் அஞ்சுகின்றனர் எனவும் , முகாம் பகுதிக்குள் வாகனங்களுடன் சென்று பொருட்களை களவாடுகிறார்கள் என்றால், நிச்சயம் அவர்களுக்குப் படையினரின் ஆதரவும் இருக்கும் என்பதால் முறையிடுவது தமக்கு ஆபத்தாக முடியும் என்றும் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்ததோடு மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (02)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு எதிரான வன்முறைகள், நிர்வாக மற்றும் அரசியல் ரீதியிலான ஒடுக்குமுறைகள், அரசியல் அதிகாரம் மற்றும் ஆட்சி நிர்வாகம் என்பவற்றில் தமிழர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டமை என்பன தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை கோருவதற்கு வழிவகுத்தன.

அதன் நீட்சியாக இடம்பெற்ற முப்பது வருடகாலப் போரில் பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இறுதிக்கட்ட போரின் போது யுத்தசூனியவலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் இலங்கை அரசாங்கம் கொத்தணிக்குண்டுகளையும் போசுபராஸ்குண்டுகளையும் பயன்படுத்தியதுடன் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான உண்மை மற்றும் நீதி, ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்புடனானநியாயமான உண்மையை கண்டறியும் பொறிமுறை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கலை முடிவுக்கு கொண்டுவரல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி முறையிலானஅதிகாரப்பகிர்வு ஆகியவற்றை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை ஆட்சிகள் தவறியுள்ளன.

குறிப்பாக, கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் ஸ்தாபித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அதிகாரங்களை மாத்திரமே கொண்டிருந்ததுடன் அதனூடாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை.

அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இராணுவமயமாக்கல், காணி அபகரிப்பு, பௌத்தமயமாக்கல், கலாசார உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன இன்னமும் தொடர்கின்றன. இம்மீறல்களுக்கு எதிராக குரல் எழுப்புவோர் கைது செய்யப்படுவதுடன் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

எனவே, நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதற்கான முயற்சிகளில் ஆட்சியாளர்கள் எவ்வித முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் நிலைமாறுகால நீதியை முன்னிறுத்தி அரசாங்கத்தினால் முன்மொழியப்படும் எந்தவொரு பொறிமுறையும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நேரடித் தலையீடின்றி பயனுடைய மற்றும் செயற்திறனான பொறிமுறையாக அமையாது என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

ஆகவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான யோசனையை மறுபரிசீலனை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், இலங்கையின் இணை அனுசரணை நாடுகள், ஜப்பான், தென்னாபிரிக்கா மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர் ஆகிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இயக்கத்திற்காக பொருட்களை கொண்டு சென்றார்கள் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

போர்ச் சூழல் காரணமாக இவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்வதில் காணப்பட்ட சிக்கல்களால் இவர்களுக்குப் பதிலாக கதிரைகளை வைத்து நடத்தப்பட்ட வழக்கு விசாரணையின் இறுதியில் இரவருக்கும் இந்தத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

சிறைச்சாலையில் இவர்களது நன்னடத்தையை கருத்திற்கொண்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

## கறுப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவில்லை.

இந்தக் கலவரங்களில் அப்பாவித் தமிழர்கள் 3 ஆயிரம்பேர்வரையிலானோர் கொல்லப்பட்டனர் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆனால் அரசினால் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு இதுவரையில் இல்லை. மனித உரிமைகளுக்கான தமிழர் நிலையத்தின் கணிப்பீட்டின்படி 5 ஆயிரத்து 638 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒன்றரை லட்சம் மக்கள் வீடுகளை, இருப்பிடங்களை இழந்து அகதிகளானார்கள். அவர்களைத் தற்காலிகத் தங்குமிடங்களில் வைத்த ஆட்சியாளர்கள் கப்பலில் வடக்கு கிழக்குக்கு ஏற்றி அனுப்பினார்கள்.

தமிழர்களின் 8 ஆயிரம் வீடுகள் 5 ஆயிரம் கடைகள் அழித்து நாசமாக்கப்பட்டன, கொள்ளையிடப்பட்டன, எரித்து அழிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட சொத்து அழிவுகள் மட்டும் 300 மில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆனால் இதற்கும் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் எவையும் இல்லை.

பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணைக்குழு என்கிற அமைப்பு 1983 விடுத்த தனது அறிக்கையில் இது ஒரு இனப்படுகொலை என்று தெரிவித்திருந்தது.

# இந்து சமுத்திர பிராந்திய அபிவிருத்தி வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்துவதே ரணிலின் திட்டம்

## அமைச்சர் அலி சப்ரி விளக்கம்

இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் அபிவிருத்தி வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும் என அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இன்று உலகில் எந்தவொரு நாடும் தனித்து முன்னேற முடியாது. உலகில் உள்ள அனைத்து அபிவிருத்தியடைந்த நாடுகளும் பிராந்திய கூட்டாண்மை மூலம் அந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்திய - இலங்கை உறவுகளை மேம்படுத்தி இலங்கையின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே ஜனாதிபதியின் வேலைத் திட்டமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இரண்டுநாள் உத்தியோகபூர்வ இந்தியவிஜயம் மற்றும் "இந்திய - இலங்கை பொருளாதார கூட்டாண்மையின் தொலைநோக்குப்பார்வை" குறித்து நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிம் பேசும்போது அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய எதையும் ஜனாதிபதியோ அல்லது ஆட்சியாளர்களோ ஒருபோதும் செய்யமாட்டார்கள் என வலியுறுத்திய அமைச்சர், இந்தச் செயற்பாடுகளை முழுப் புரிந்துணர்வுடனும் அனைத்துத்தரப்பினரின் இணக்கப்பாட்டுடனும் செயற்படுத்துவதே ஆட்சியாளர்களின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் நெருங்கிய மற்றும் நீண்டகால நட்பு நாடான இந்தியாவுடன் புரிந்துணர்வு உறவைக் கட்டியெழுப்புவது இரு நாடுகளுக்கும் அதேபோன்று பிராந்தியத்துக்கும் மிகவும் நல்லதொரு நிலையாகும் என்று நாங்கள் நம்புகிறோம். அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் மொத்த வளர்ச்சியில் 2/3 ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் என்பது இன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயம். மேலும் இந்தியாவும் சீனாவும் அதில் முன்னிலை வகிக்கும் என்பது எவ்வித விவாதமும் இன்றி சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள உண்மையாகும்.

எனவே, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய அபிவிருத்தி வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தை உற்றுநோக்கினால், அந்நாடுகள் இணைந்து செயற்பட்டதன் காரணமாக முழு ஐரோப்பிய பிராந்தியமும் வளர்ச்சியடைந்தது. மத்தியகிழக்குநாடுகளைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான். சீனாவைப்போலவே, அமெரிக்கப்பிராந்தியமும் அதே முறையில் அபிவிருத்தியடைந்தது. இந்த அபிவிருத்தி வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேறுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஜனாதிபதி அண்மையில் இந்தியாவுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார். அப்போது, பல முக்கிய கலந்துரையாடல்களில் அவர் பங்கேற்றார். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கருடன் கலந்துரையாடிய பின்னர், இந்தியாவின் தலைமை பாதுகாப்பு ஆலோசகருடனும் கலந்துரையாடப்பட்டது. அதன் பின், ஜனாதிபதி, இலங்கை தூதுக் குழுவினருடன் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு நடத்தினார். கடந்த காலத்தில் நாம் சந்தித்த பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா எங்களுக்கு பெரும் உதவிகளை வழங்கியது. நிதி நிவாரணம் வழங்கியதோடு குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமைத்துவத்தையும் வழங்கியது. இந்தக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நாம் நிறைவு செய்ய வேண்டும். அதற்கான இந்தியாவின் ஆதரவை நாங்கள் தொடர்ந்து பெற்று வருகிறோம். இந்த அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் இந்திய பிரதமருக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். மேலும், நமது இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை யொட்டி, நமது பொருளாதார, சமூக மற்றும் மக்களுக்குஇடையிலான உறவுகளைமேம்படுத்துவது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அடுத்தகட்டத்துக்குச்செல்வதற்கு முதலீடுகள் தேவைப்படுவதுடன், அந்த முதலீடுகளின் ஊடாக சந்தைவாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்பட்டால், இரு நாடுகளும் பெரும் நன்மைகளை பெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்திய பிரதமருடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அரசாங்கங்களுக்கிடையில் மாத்திரமன்றி தனியார்துறைகளுக்கிடையிலும் உடன்பாடுகளை எட்டுவதற்கு தேவையான பின்னணி குறித்து ஆராயப்பட்டது.

இந்தியரூபாயை இலங்கையில் செல்லுபடியாகும் நாணயமாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இங்கு பரிசீலிக்கப்பட்டதுடன், அதற்கான ஏற்பாடுகள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மீண்டும் மீண்டும் பணத்தை ஏனைய நாணய அலகுகளுக்கு மாற்றாமல் எளிதாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பளிப்பதே இதன் நோக்கமாகும். இந்தியாவும் சிங்கப்பூரை இவ்விதம் கையாண்டு இரு நாடுகளும் பெரும் பயன்களை அடைந்துள்ளன.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே மிகச் சிறந்த உறவை எவ்வாறு பேணுவது என்பது குறித்து விரிவாக கலந்துரையாடினோம். இப்போது இந்தியாவுக்கும் பலாலி விமான நிலையத்துக்கும் இடையில் தினசரி விமான சேவைகள் உள்ளன. எதிர்காலத்தில் பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். மேலும், உள்நாட்டு விமான சேவைகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்தும் நாம் ஆராய்ந்தோம்.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சி மற்றும் அதற்காக ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. சுற்றுலாத்துறையில் இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேம்படுத்துவதில் சுற்றுலா கப்பல் சேவையை (ஶ்ரீஷற்ஷ்விள வீலிற்ஷஷ்விது) மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார். இது இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு துறையாக இருப்பதுடன், இதன் மூலம் இலங்கையில் சுற்றுலாத்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இன்று தென்னிந்திய பிராந்தியம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியை, இலங்கைக்கு பயனளிக்கும் வகையில், துறைமுகங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை இரு நாட்டுத் தலைவர்களும் இனங்கண்டுள்ளனர்.

துறைமுகங்களுக்கு இடையே இந்த உறவுகளை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது பற்றி துறைசார் நிபுணர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டும். இது குறித்து கலந்துரையாடி விடயங்களை ஆராய்ந்து தீர்மானத்துக்கு வருவது குறித்து தலைவர்கள் இருவரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர். இவ்விடயங்கள் குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் விரிவாக கலந்துரையாடிய பின்னர், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தீர்மானிப்பதன் அவசியம் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

மேலும் 2030ஆம் ஆண்டுக்குள் நாட்டின் தேசிய மின்சாரத் தேவையில் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக் கொண்டு பூர்த்தி செய்யும் திறன் உள்ளது. அதன் பிறகு மேலதிகத்தை ஏற்றுமதி செய்ய ஒரு சந்தை வேண்டும். எனவே இதன் மூலம் பெரும் நிதியை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். நமது சூரிய சக்தி மற்றும் காற்று வலு போன்றவற்றை ஏற்றுமதிக்கைத்தொழிலுக்கு பயன்படுத்திக்கொள்ளத் தேவையான சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் எமக்குப் பெரும் தேவை உள்ளது. அதுபற்றி இங்கு விரிவாக கலந்துரையாடினோம்.

மேலும், இதன்போது இணைந்து பணியாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. நவீன தொழில்நுட்பங்கள் மூலம் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் நாம் கலந்துரையாடினோம்.

இந்நாட்டுவிவசாயத்துக்காகதொழில்நுட்ப அறிவைப் பெறுவது மிகவும் முக்கியம். கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி உள்ளிட்ட துறைகளுக்கான தொழில்நுட்ப அறிவைப் பெறுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டோம். இன்று இந்தியா டிஜிட்டல்மயமாக்கலில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கையில் டிஜிட்டல்மயமாக்கலை விரைவுபடுத்துவதற்கு இந்தியாவிடமிருந்து தொழில்நுட்ப உதவிகளை பெறுவது குறித்தும் நாம் ஆராய்ந்தோம்.

மேலும், இந்திய பல்கலைக் கழகங்களுக்கும் இலங்கை பல்கலைக் கழகங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதுடன், இந்திய முன்னணி பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கு அவசியமான முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலையக மக்கள் இந்நாட்டுக்கு வந்து சுமார் 200 வருடங்கள் கடந்துள்ளன. அவர்களின் முன்னேற்றத்துக்காகப் பல திட்டங்களை செயல்படுத்த இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதுடன், இந்திய அரசாங்கம் அதற்காக 750 மில்லியன் இந்திய ரூபாயை முதலீடு செய்யவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நுவரெலியா பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிப்பது குறித்தும், அது தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மீனவசமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. வடக்கில் இழுவைப் படகுகளை கொண்டு மீன்பிடிப்பதை நிறுத்துவதற்கான வாய்ப்பு தொடர்பில் இதன்போது ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். இலங்கை மீனவர்களுக்கு இந்திய எல்லையைத் தாண்டி அதற்கு அப்பால் செல்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்தோம். இருதரப்பினரும் ஒன்றிணைந்து தொடர்ந்து கலந்துரையாடுவதன் மூலம் இந்த பிரச்சினைகளை தீர்க்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்து சமுத்திர பிராந்தியம் முழுவதையும் பாதுகாப்பான வலயமாக எவ்வாறு பராமரிப்பது மற்றும் பரஸ்பர பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத விடயங்களை மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் கூட்டாக செயல்படுவது குறித்தும் இரு தரப்பும் இணக்கப்பாட்டுடன் கலந்துரையாடப்பட்டது - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர்கள் விரும்புவது சமஷ்டியா என்பதை அறிய மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தும் துணிவுண்டா?

## கஜேந்திரகுமார் எம்.பி. அறைகூவல்



தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது தொடர்பில் தெரிந்துகொள்வதற்கு முதுகெழும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கஜேந்திரகுமார்பொன்னம்பலம் சவால் விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - 'நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, நீதிமன்றத்தையும் நீதிபதியையும்அவமதிக்கும்வகையில்கருத்து வெளியிட்டார். இப்படியான ஒருவர்தான் தேசிய பொதுப் பாதுகாப்புக்குழுவின் தலைவராக உள்ளார். பொறுப்புக்கூறல் விடயத்தில் ஏற்கனவே சர்வதேச ரீதியாக இந்த நாடு அவநம்பிக்கை பெற்றுள்ளது. இந்த நிலையில், இதுபோன்றவர்களின் செயற்பாடுகளால்தான் நாட்டில், சட்டங்கள் பின்பற்றப்படும் விடயத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனும் சமஷ்டியை வழங்க முடியாது என்று உணர்ச்சியுடன் பேசியிருந்தார். தமிழ்த் தேசிய வாதிகள் சமஷ்டி தொடர்பாகப் பேசுகிறார்கள் என்றும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இவரது இந்தக் கருத்து முட்டாள்தனமான ஒன்றாகும். போர்க்குற்றவாளியான சரத்வீரசேகர இவ்வாறு பேசுகின்றமை சாதாரண விடயம்தான். ஆனால், கலாநிதிப் பட்டம் பெற்ற சுரேன் ராகவன், சமஷ்டியை பிரிவினைவாதம் எனக் கூறுகின்றமை, அவரிடம் புலமை இல்லை என்பதையே காண்பிக்கிறது. ஜனாதிபதி, நல்லிணக்கம் தொடர்பாக பேச்சுநடத்த தமிழ்க் கட்சிகளை அழைக்கும்போதுதான் இவ்வாறு அவர் பேசியுள்ளார். இதுபோன்றவர்களிடம் நான் சவால் விடுக்கிறேன். முடிந்தால் வடக்கு-கிழக்கில்சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்திக் காட்டுங்கள். தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது அப்போது தெரியவரும். இதற்கு நீங்கள் தயாரா? முதுகெழும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுங்கள். -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## தொடருந்து கடவைக்கு 29, 30 திகதிகளில் பூட்டு

வெலிகந்த மற்றும் புனானிக்கு இடையிலான நாமல்கம ரயில் கடவை எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் வாகன போக்குவரத்துக்காக முற்றாக மூடப்படும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பராமரிப்பு பணி காரணமாக 29 ஆம் திகதி காலை 7 மணிக்கு பாதை மூடப்பட்டு 30 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்படும்.

எனவே, குறித்த இரண்டு நாள்களிலும் ரயில் கடவைக்கு பதிலாக மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு சாரதிகளிடம் ரயில்வேத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (05)

## உலக சுகாதார ஸ்தாபன பரிந்துரைக்கு அமைவாக புதிய இறப்புச் சான்றிதழ்களை வழங்கத் தீர்மானம்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்குஅமைய,பல்வேறு விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள புதிய இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு, நீதி அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த இறப்புச் சான்றிதழைதயாரித்துள்ளன என அகில இலங்கை திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அநுர ஹேரத் தெரிவித்துள்ளார்.

12 பிரதான விடயங்கள், 24 உப விடயங்களை உள்ளடக்கியதாக இந்த இறப்புச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இறப்புக்கான காரணம், இயற்கையான இறப்பா இல்லையா என்பனவே இதுவரை வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது,உயிரிழந்தநபர் தொடர்பிலும் இறப்புக்கான காரணம் தொடர்பிலும் சான்றிதழில் குறிப்பிட வேண்டும்என்பதுடன்,இறப்பு விசாரணை அதிகாரிகளால் இறப்புச் சான்றிதழ்களில் ஒப்பமிடப்படவும்வேண்டும்.

இறப்புக்கான காரணத்தை நான்கு விடயங்களின் கீழ் விரிவாகக் குறிப்பிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். உயிரிழப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இருந்து இடம்பெறும் அனைத்து இறப்புப் பரிசோதனைகளையும் புதிய இறப்புச் சான்றிதழ்களில் குறிப்பிடவேண்டும்எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

## நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு 200 ரூபா வரி

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு 200 ரூபா வரி விதிக்குமாறு நாடாளுமன்றஉறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.கோதுமை மாவுக்கு வரி விதிக்கப்படாமையால் அரசாங்கத்திற்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)





## உணவக உரிமையாளர்களுடன் கல்முனையில் கலந்துரையாடல்!

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ். எம் பௌசாத்தால், உணவகங்களை மேம்படுத்தி சுகாதாரமான உணவை வழங்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம் பீ ஏ வாஜித் அவர்களும் தெரிவு செய்யப்பட்ட பிரிவுத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இதன்போது தத்தமது பிரிவுகளால் முன்னெடுக்கப்படும் செயற்றிடங்கள் தொடர்பிலும் உணவகங்களை மேம்படுத்தி சுகாதாரமானதும் சுத்தமானதுமான உணவை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் விவரித்தனர். இந்தக் கலந்துரையாட லுக்கு கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு, சாய்ந்தமருது, நாவிதன்வெளிஆகியசுகாதார வைத்தியஅதிகாரிஅலுவலக பிரிவுகளுக்குஉட்பட்டஉணவக உரிமையாளர்கள் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்களின்சந்தேகங்களை தீர்ப்பதற்கான நேரமும் வழங்கப்பட்டிருந்தது. (05)

## 'பொய்மான்' திரைப்பட திரையிடல் நிகழ்வு இன்று



வைத்தியர் ஜெயமோகன் இயக்கிய 'பொய்மான்' திரைப்படத்தின்திரைத்துறை சார்ந்த விசேட பிரதிநிதிகளுக்கான திரையிடல் நிகழ்வு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ஊடகஅமையத்தில் இடம்பெற்றவிசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இயக்குநர் ஜே.ஜெயமோகன் இதனைத் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்ப உபகரணங்களைஇணைத்து ஆஸ்திரேலிய மண்ணில் ரோபனம் கிரியேன்ஸ் கலைஞர்களால் உருவாகியுள்ள 'பொய்மான்' திரைப்படம், தமிழ்க் கலைஞர்களின் அரியதொரு படைப்பாக எதிர் பார்க்கப்படுவ துடன் இலங்கையிலும் சில காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு செல்லும்அகதிகள்தொடர்பாக பேசும் இந்த முழுநீள திரைப்படத்தில் புலம்பெயர் இளங் கலைஞர்களின் படைப்பாற்றலில் ஜனார்தன், கவிஜா, ஜெயமோகன், ர்மினி நடித்துள்ளனர்.

புற்றுநோய் மருத்துவராகவும், மேடை நாடகம், குறும்பட இயக்குநராகவும் நன்கு அறியப்படும் மருத்துவர் ஜெயமோகன் முழுநேர திரைப்பட இயக்குநராக அறிமுகமாகிறார்.

'பொய்மான்' திரைப் படத்தின் இசை வெளியீட்டு விழா இவ்வருடம் ஜனவரி மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)

## மாவட்ட விவசாயகுழுகூட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு

கிளிநொச்சிமாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட விவசாய குழுவின் தலைவருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் முன்கொண்டுவரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் மாவட்ட விவசாய துறைசார்ந்த திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்றிட்டங்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள், மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கால்நடை பராமரிப்பு பற்றிய செயற்பாடுகள், வங்கி செயற்பாடுகள், நெல்சந்தைப்படுத்தல் சபையின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர், செயலாளர்கள், நீர்பாசன திணைக்களத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர், துறை சார்ந்த திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள்உள்ளிட்ட பலரும்கலந்துகொண்டனர். (05)

# வைத்தியசாலைகளின் நிர்வாகத்தில் அந்திம சேவையையும் இணையுங்கள்

## சரத் பொன்சேகா சீற்றம்



வைத்தியசாலைகளின் நிர்வாக சபைக்கு, அந்திம சேவை உரிமையாளரையும் இணைத்துக்கொள்ள வேண்டுமெனநாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'பேராதனை வைத்தியசாலையில் 21 வயது யுவதியொருவர் மருந்து ஒவ்வாமையால் உயிரிழந்தார். இந்தமருந்தை பயன்படுத்தி ஏற்கனவே நால்வர்உயிரிழந்துள்ளநிலையில், அண்மையில் கேகாலை வைத்தியசாலையிலும்இதே தடுப்பூசி செலுத்தப்பட்டஒருவர்உயிரிழந்தார்.

குளியாப்பிட்டியவில் 4 மாதக் குழந்தையும் மருந்து ஒவ்வாமையால் உயிரிழந்தது. இவ்வாறு இருக்கையில், இவ்வாறு மரணங்கள் நிகழ்வது சாதாரண ஒரு விடயமாகும் என்று அரசாங்கத்தின் அடிவருடிகள் தொலைக்காட்சிகளில்கருத்து வெளியிடுகிறார்கள்.

ஐரோப்பாபோன்றதொரு நாட்டில்மருந்துவிசமடைந்து ஒருவர் உயிரிழந்தால், சுகாதார அமைச்சர் முதல் கீழ்தட்டு அதிகாரிவரை, அனைவரும்சிறையில்தான் இருப்பார்கள்.

இந்த நிலையில், சுகாதார அமைச்சரோ வைத்தியசாலையில் மரணங்கள் இடம்பெறுவது சாதாரணமான விடயம் என்பதால்தான், வைத்தியசாலைகளுக்கு உள்ளே பிணவறையும், வைத்தியசாலைக்கு வெளியே மலர்சாலைகளும் இருக்கின்றன எனக் கூறியுள்ளார்.

அப்படியென்றால், இனிமேல் வைத்தியசாலைகளின் நிர்வாக சபைக்கு, அருகில் உள்ள மலர்சாலையின் உரிமையாளரையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

அப்படியென்னால், இன்னமும் இந்த விடயத்தை இலகுபடுத்திக் கொள்ளலாம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தியப் பயணத்தால் பயனேதுமுண்டா?

இலங்கை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் பின்னர் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் வந்திருக்கக்கூடிய அறிவிப்புக்களில் எந்தப் புதிய விடயங்களும் இல்லை. இந்தியா வழக்கமாகத் தெரிவித்து வரும் விடயங்கள் மட்டுமே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் சில விடயங்களை இந்தியா கைவிட்டிருக்கின்றது.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, ஈழத் தமிழர்கள் அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி சில வரிகள் குறிப்பிட்டார். தமிழர்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்றும் வாக்குறுதியளிக்கப்பட்டபடி 13ஐ நிறைவேற்றும் என்றும் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடக்கும் என்றும் தமிழ் மக்கள் மரியாதையுடனும் கண்ணியமாகவும் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்படும் என்றும் இந்தியா எதிர்பார்க்கின்றது என்று மோடி அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்களில் எந்தப் புதிய விடங்களும் இல்லை. இவை வழக்கமாக இந்தியா வலியுறுத்தி வந்த விடயங்கள்தான். சில காலங்கள் 13ஐ நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கும் அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்கான இலங்கையின் கடப்பாட்டையும் சேர்த்து வலியுறுத்தி வந்த இந்தியா இப்போது அதனைக் கைவிட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சருடனான சந்திப்பில் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கான தனது திட்டம் குறித்து – அதிகாரப்பகிர்வுத் திட்டம் குறித்து – தான் விளக்கினார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அது என்ன திட்டம் என்பது தொடர்பில் அவர் அங்கு விவரிக்கவில்லை என்றாலும் கடந்த வாரம் தான் முன்வைத்த திட்டம் என்றார். அதாவது, அவர் இந்தியா புறப்படுவதற்கு முன்பாக வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பில், காவல்துறை அதிகாரங்களைத் தவிர்த்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் தெரிவித்திருந்ததையே அவர் அப்படிக் குறிப்பிட்டார் என்று கருதலாம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் மத்தியால் கையகப்படுத்தப்பட்ட மாகாணங்களின் அதிகாரங்களைத் திரும்ப வழங்குவதற்கும் தான் தயார் என்றார். அதனைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நாடாளுமன்ற சட்டவரைவுகளைத் தனது ஆட்சி விரைவிலல் முன்வைக்கும் என்றார். மாகாண சபைகள் சட்டங்களில் காணப்படும் ஒருங்கு நிரல் (பொது நிரல்) ஒழிக்கப்பட்டு அதிலிருக்கும் பெரும்பாலான விடயங்கள் மாகாண சபைகள் நிரலில் சேர்க்கப்படும் என்றார். இதற்காக மாகாண சபைகள் தொடர்பான புதிய சட்டங்களை ஆக்குவதற்கும் தான் தயார் என்றார். இறுதியாக அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடனும் அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளவும் தான் தயார் என்றும் ரணில் அறிவித்திருந்தார்.

அவரது இந்தத் திட்டத்தை அதிகாரப் பகிர்வு என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ் அரசுக் கட்சி அந்தப் பேச்சு மேசையிலேயே நிராகரித்துவிட்டது. பேச்சு மேசையில் அமைதியாக எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தாது இருந்தபோதும், அதன் பின்னர் விடுத்த அறிக்கையில் ரணிலுடனான பேச்சு வெறும் ஏமாற்று நாடகம் என்று கூறி அவரது கருத்துக்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் நிராகரித்திருந்தது.

13ஐ பலப்படுத்தும் அரசுத் தலைவரின் எந்தவொரு திட்டத்திற்கும் ஆதரவளிப்பதாக தமிழ் மக்கள் கூட்டணிச் செயலாளர், முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பேச்சு மேசையிலேயே தெரிவித்திருந்தார். ஆனால், ரணிலின் திட்டம் 13ஐப் பலப்படுத்துமா பலவீனப்படுத்துமா என்று அவர் தெரிவிக்கவில்லை. அவர் தவிர ஆளும் தரப்பில் உள்ளவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாசன் ஆகியோர் ரணிலின் திட்டத்தை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆக, தமிழ்த் தேசியக் கட்சிகளில் பெரும்பாலானவை எதிர்க்கின்ற திட்டத்தையே ஏற்றுச் செயற்படுத்துமாறு இந்தியா இலங்கைக்குத் தெரிவித்திருக்கிறது என்றே கொள்ளவேண்டும்.


ரணிலின் இந்தியப் பயணத்திற்கு முன்பாக இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்குக் கடிதம் எழுதிய ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் ஆகக் குறைந்தது 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அழுத்தம் கொடுக்கக் கேட்டுக்கொண்டன. ஆனால் அவ்வாறு ''முழுமையானக'' நடைமுறைப்படுத்தல் என்ற பதத்தைக்கூட இந்தியத் தலைமை அமைச்சர் உச்சரிக்கவில்லை. ஆக, ரணிலின் காவல்துறை அதிகாரங்களற்ற 13 என்கிற திட்டத்தை மோடியும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்றே அர்த்தப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தமிழ்த் தலைவர்களில் முழுமையான 13 கேட்டவர்களின் கடிதங்களால் என்ன பயன் என்பதும் புரியவில்லை. இந்தியா இது விடயத்தில் எதையாவது செய்யும் என்று அவர்கள் தங்களையும் நம்பவைத்து தமிழர்களையும் நம்ப வைத்து ஏமாற்றுவதில் ஏதாவது பயனுன்டா என்பதும் புரியவில்லை.


பன்னாட்டுச் சமூகம், இந்தியா, ஐநா என்று வெளிச் சக்திகளை நம்புவதையும் அவற்றால் தீர்வு கிடைக்கும் என்று தமிழ் மக்களை ஏமாற்றுவதையும் இனியாவது நிறுத்திவிட்டு உருப்படியான அரசியல் செய்வதற்கு தமிழ்க் கட்சிகள் இனியாவது முன்வரவேண்டும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்பகூட கட்டடத்துக்கான நிதியை நிறுத்தியது உலக வங்கி


## ஒப்பந்தப்படி பணிகள் நடைபெறாததே காரணம்














**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு தொழில்நுட்ப பீடம் அமைக்கக் கிடைத்த 427 மில்லியன் ரூபா நிதியில் முதற்கட்டக் கொடுப்பனவு தவிர மீதி நிதியை மீளப்பெற்று திட்டத்தை நிறுத்தியுள்ளது உலகவங்கி. குறிக்கப்பட்ட கால அட்டவணைக்குள் திட்டத்தை நிறைவு செய்யத் தவறியமை மற்றும் வழங்கிய மேலதிக காலத்திற்குள்கூட வேலைகளை முன்னெடுப்பதற்கு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமை ஆகிய காரணங்களால் உலகவங்கி தனது நிதியைத் திரும்பப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் உள்ள தொழில்நுட்ப பிரிவின் பாவனைக்காக தொழில்நுட்பக்கூட கட்டடம் அமைப்பிற்காக உலக வங்கி இந்த நிதியை வழங்கியிருந்தது.

உலக வங்கியின் எகெய்ட் (AHEAD) என்ற திட்டத்தின் ஊடாக தொழில்நுட்பகூட கட்டடத்துக்கான நிதி வழங்கப்பட்டது. வழக்கமான அரச நடைமுறைகளுக்கு ஏற்ப கேள்வி கோரல்கள் கேட்கப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டன. உலக வங்கியின் நிபந்தனையின்படி 2022 ஜனவரி திட்டம் தொடங்கியது. 2023 ஜூன் 22 கட்டடம் முழுமை பெற்றிருக்கவேண்டும். இந்தக் கட்டடப் பணிகளுக்காக உலக வங்கி 2022 முதல் கட்டக் கொடுப்பனவாக 116 மில்லியன் ரூபாவினை உயர் கல்வி அமைச்சின் ஊடாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு விடுவித்தது.

நிதியைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர் தூண்களை எழுப்பி கட்டடத்தின் இரு தளங்களை மட்டும் அமைத்துள்ளார். மீதிப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. அதனைக் கண்காணித்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிக்கவேண்டிய பணிகளை நிறைவேற்றியிருக்கவேண்டிய யாழ். பல்கலைக்கழக பொறியியல் பிரிவும் நிர்வாகமும் ஒப்பந்தக்காரரால் தெரிவிக்கப்பட்ட விலை அதிகரிப்பு, மூலப் பொருள்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் என்ற காரணங்களால் மயங்கி வளாவிருந்ததால், சில நினைவூட்டல்களை வழங்கிய உலக வங்கி இறுதியில் நிதியை மீளப் பெற்று திட்டத்தை நிறுத்துவதாக அறிவித்துவிட்டது.

உலகவங்கியின் ஆய்வின் பிரகாரம் கட்டடப் பணிகள் தொடக்க கட்டத்தையே தாண்டவில்லை. விடுவிக்கப்பட்ட நிதியிலும் 50 சதவீதமான நிதிக்கே பணிகள் செய்யப்பட்டதாக சிட்டைகள் மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, கட்டடம் முழுமை பெற்றிருக்கவேண்டிய 2023 ஜூன் வரையில் வெறுமனே 76 மில்லியன் ரூபாவிற்கான பணிகள் மட்டுமே இடம்பெற்றுள்ளதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கட்டடம் இரு தளங்களை அமைப்பதற்காகச் செலவிடப்பட்ட பணம்.

இந்த நிலையில் குறித்த திட்டத்திற்கான நிதி வழங்குநரான உலக வங்கி திட்ட முகாமை அமைப்பின் ஊடாக இது தொடர்பில் அறிவித்தபோது நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் விலை ஏற்றம் பல்கலைக்கழகம் காரணம் காட்டியது. ஒப்பந்தம் செய்தபோது இருந்ததைவிட அதன் பின்னர் கட்டடப் பொருள்களின் விலைகள் எக்கச்சக்கமான எகிறிவிட்டதால் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தகாரர் பின்னடிக்கிறார் என்று விளக்கமளித்தது. ஆனால், அந்தக் காரணத்தை ஏற்க உலக வங்கி மறுத்துவிட்டது. ஒப்பந்தப்படி பணிகளை நிறைவேற்றும்படி அறிவுறுத்தியது.

உலக வங்கி அப்படி அறிவுறுத்திய பின்னரும்கூட, 20203 பெப்ரவரியில் 71 சதவீதப் பணிகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவேண்டிய கால எல்லையில் 24 சதவீதப் பணிகளைக்கூட நிறைவேறியிருக்கவில்லை. இது தொடர்பாக நினைவூட்டியும், உலக வங்கியின் ஒப்பந்தத்திற்கு அமையச் செயற்படாத காரணத்தினாலும் இத்திட்டத்தை முழுமையாக நிறுத்துவதாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றிற்கு உலக வங்கியின் எகெய்ட் திட்டம் கடிதம் எழுதியது. இந்தக் கடிதத்தின்படி இனி இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி நிதி வழங்காது என்று துறைசார் வல்லுநர்கள் காலைக்கதிரிடம் தெரிவித்தார்கள். ஆனால், அந்த நிதியைப் பெறுவதற்குத் தாம் தொடர்ந்தும் முயற்சித்து வருவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது.

இதனால் குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி சிவமதி சிவச்சந்திரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டு விட்டது என தற்போது கூற முடியாது என்றார்.

நிதியை நிறுத்துவது தொடர்பான கடிதம் கிடைத்ததைத் தொடர்ந்து, அதனைத் திரும்பப் பெற்று கட்டுமானத்தை தொடரவே முயற்சிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக, உலக வங்கி இந்த முடிவை எட்டியிருக்கக்கூடும் என்பதனால் கொழும்பில் உயர் கல்வி அமைச்சின் ஊடாக மீண்டும் திட்டத்தை தொடர்வதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் - ஒப்பந்தகாரர பல்கலைக்கழக பொறியிலாளர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் - ஈடுபட்டு வருகின்றனர் என்றும் சிவமதி தெரிவித்தார்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு கிடைத்த ஒரு சொத்து அல்லது திட்டம் பல்கலகைக் கழகத்திற்கு கிடைக்காமல் போகும் நிலமைக்கு என்ன காரணம் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான பேராசிரியர் சிறி சற்குணராஜாவை தொடர்பு கொண்டு கேட்டபோது,

இத் திட்டம் நின்றுவிட்டது எனச் சொல்ல முடியாது என்று சமாளித்தார்.

"அது மிகப் பெரும் பணி அதில் சில பல தாமதங்கள் ஏற்பட்டாலும் பணிகள் இடம்பெறும்.. மாணவர்களின் நன்மை கருதி அதனைத் தொடர்வோம். பொருளாதார நெருக்கடி காரணமா கக் கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தினாலும் ஒப்பந்தகாரர் மூலப்பொருள்களை பெறுவதில் இருந்த நெருக்கடியினாலும் இந்த நிலை ஏற்பட்டது. தற்போது அதனைச் சீர்செய்யப் பல வழிகளில் முயற்சிக்கின்றோம்" என்றார். ஆனால், எக்காரணம் கொண்டும் எகெய்ட் திட்டத்தின் மூலமாக நிதியைத் திரும்பப்பெற முடியாது என்று உலக வங்கியோடு தொடர்புடைய அதிகாரி ஒருவர் காலைக்கதிர் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# பௌத்த தொல்பொருள் சின்னமாக குருந்தூர்மலையை அறிவியுங்கள்

## ஜயந்த சமரவீர கோரிக்கை



முல்லைத்தீவு குருந்தூர்மலையை, பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர நாடாளுமன்றில் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இதனை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால், இன ஐக்கியத்துக்கு பாதிப்பு ஏற்படும்என்றும்குறிப்பிட்டார். இவ்விடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள், குருந்தூர் விகாரை வளாகத்தில் பொங்கல் நிகழ்வொன்றை கடந்த சில நாள்களுக்கு முன்னர்நடத்தமுயற்சித்தனர். எனினும் பொலிஸார் இதற்கு இடம் கொடுக்கவில்லை.

இந்த நிலையில், ரவிகரன் உள்ளிட்ட சிலர், வெள்ளிக்கிழமையும் அங்கே பொங்கல் நிகழ்வொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். 1931 ஆம் ஆண்டு, வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குருந்தூர்மலை என்பது பௌத்த தொல் பொருள்சின்னமாகவேஅடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, அங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும், அங்கு எந்தவொரு இந்துமதஅடையாளங்களும் கண்டெடுக்கப்படவில்லை.

அங்கே எந்த இடத்திலும் தமிழ் எழுத்துக்களோ இந்து மதச் சின்னங்களோ காணப்படவில்லை.

இவ்வாறு இருக்கையில், குருந்தூர்மலை பகுதியில் இந்துமத ஆலயம் இருப்பதாக இந்த பிரிவினைவாதிகள் தெரிவித்து வரும் கருத்துக்களின் காரணத்தால்தான், அங்கு தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, குருந்தூர் மலையை பௌத்த தொல் பொருள் சின்னமாக மீண்டும் அறிவித்தால், இந்த முரண்பாடுகளை இல்லாது செய்ய முடியும் என நாம் நினைக்கிறோம்.

அவ்வாறு இல்லாவிட்டால், இதனால் பாரிய சர்ச்சைகள் ஏற்படும் என்பதோடு, தேசிய ஐக்கியத்துக்கும் இது பாதிப்பாக அமைந்துவிடும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சட்டக் கல்லூரி அனுமதிக்கான கட்டணம் அரசால் அதிகரிப்பு

## காரணத்தை விளக்கினார் நீதியமைச்சர்

அரச நிதியுதவியில் சட்டக் கல்லூரி கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை அதனால்தான் சட்டக்கல்லூரிக்கான அனுமதிக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி ஏற்படுகிறதுஎனநீதிஅமைச்சர்விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சஜித்பிரேதமதாஸகுறிப்பிடுகையில் -சட்டக்கல்லூரிக்குஅனுமதிப்பதற்காக15 ஆயிரம் ரூபா அறவிடப்படும்நிலையில், பரீட்சை கட்டணமாக 1200 ரூபா அறவிடுவதன்மூலமும்மற்றும்உயர்தர பரீட்சைபெறுபேறுகள்வெளியிடுவதற்கு முன்னர்சட்டக்கல்லூரிக்குவிண்ணப்பம் கோரி இருப்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். இது தொடர்பில் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். -என்றார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், புதிய வர்த்தமானி ஒழுங்குவிதிகள் பிரகாரம் சட்டக்கல்லூரி அனுமதிக் கட்டணத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கட்டண அதிகரிப்பு மேற்கொள்வதற்கு முன்னர் சட்ட கல்வி கவுன்சிலுடன் நீண்டவகையில் கலந்துரையாடி, இது தொடர்பாக தேடிப்பார்த்தோம். 5 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் சட்டக்கல்லூரி மேற்கொண்டு வருகிறது. ஆனால் சட்டக்கல்லூரிக்கு அரசாங்கத்தினால் எந்த நிதியும் வழங்குவதில்லை. சட்டக்கல்லூரிக்கு வேறு வருமான வழிகளும் இல்லை.

அதனால்மாணவர்களிடம்அறவிடப்படும் பணத்தில் இருந்தே ஒட்டுமொத்த சட்டக்கல்லூரி மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம் சட்டக்கல்லூரிக்கு தற்போது விண்ணப்பம் கோரி இருப்பது தொடர்பாக தேடிப்பார்த்து உரிய நடவடிக்கை எடுப்பேன். -என்றார். (05)

# ஜயந்தவின் யோசனை தொடர்பில் சட்ட ஆலோசனை பெற தீர்மானம்

## அமைச்சர் விதுர நாடாளுமன்றில் தெரிவிப்பு



சட்ட ஆலோசனைகளுக்கு அமைய குருந்தூர் மலையை 'பௌத்த தொல்லியல் பகுதியாக 'பிரகடனப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பதிலளித்த புத்த சாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க -

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சட்ட ஆலோசனைகளை பெற்று இவர் (ஜயந்த சமரவீர) முன்வைத்த யோசனையை செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம். - என்றார். (05)



# ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார் அதானிகுழும தலைவர் கௌதம்

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஅதானி குழுமத்தின்தலைவர்கௌதம் அதானியை சந்தித்துள்ளார்.

குறித்தசந்திப்புதொடர்பில் கௌதம் அதானி தனது ருவிட்டர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி, 500மெகாவொட் காற்றலைமின்உற்பத்தித்திட்டம் மற்றும் பசுமை ஐதரசன் திட்டம் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

# வியத்கம என்ற பயங்கரவாதக் கூட்டத்தினர் சிலர் தமிழ் பேசும் மக்களின் இருப்பை அழிக்க முயற்சி

## வியாழேந்திரன் எம்.பி. ஆவேசப் பேச்சு



'வியத்கம' என்றதொரு பைத்தியக்கார கூட்டத்தை சேர்ந்த சிலர் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் இருப்பைகேள்விக்குள்ளாக்க நினைக்கின்றனர்.

வடக்கு நீதிபதிகளை மிரட்டிக்கொண்டு அவர்கள் மீதுகுற்றம்சுமத்திக்கொண்டு கேவலமான முறையில் சரத் வீரசேகர போன்றோர் செயற்படுகின்றனர்.

இவர்களால் கடந்த அரசாங்கம் ஏற்கவே பாடம் கற்றுள்ளது என வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வங்கித்தொழில் விசேடஏற்பாடுகள்சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

எனது மாவட்டத்தில் அண்மையில் சில போராட்டங்கள் நடந்தன. அதில் சில மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்த போராட்டங்களில் எங்களது பெயரையும் சிலர் பயன்படுத்தினார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எமது பெயரை பயன்படுத்தினார்.

அவரின்பெயரைசொல்ல மாட்டேன். ஏனெனில் அவர் தனது பெயரை சொல்ல வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான வேலைகளை செய்து பிரபல்யம் அடைய நினைப்பவர். அவரின் தலையை முதலில் ஸ்கான் செய்து அதற்குள் மூளை இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். அவர் தலையால் யோசித்துவாயால்பேசுபவரல்லர்.

2015 ஆம் ஆண்டிலிருந்தது நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். எனது பெயரிலோ எங்களை சார்ந்தவர்கள் பெயரிலோ எந்தவொரு மதுபானசாலைகளும் இல்லை. அவ்வாறு இருக்கின்றது என்பதை நிரூபித்தால் நான் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து 24 மணி நேரத்தினுள் பதவி விலகுவேன்.

ஆளும் கட்சியிலுள்ள சில இனவாதிகள் குறிப்பாக தொல்லியல் திணைக்களம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்விக, பாரம்பரிய, வாழ்வாதார பண்பாட்டுவிழுமியங்களை அழிக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஆளும் கட்சியிலுள்ள சில இனவாதிகள் "வியத்கம' என்றதொரு பைத்தியக்காரக்கூட்டம் தான் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பக்கத்தில் இருந்து கொண்டு விவசாயம் உட்பட அரச துறைகள்தொடர்பில்தவறான தகவல்களைவழங்கிஅவரை பதவி விலக்கினார்கள்.

'வியத்கம' என்றதொரு பைத்தியக்காரக்கூட்டத்தை சேர்ந்த சிலர்தான் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்க நினைக்கின்றனர்.

வடக்கு நீதிபதிகளை மிரட்டிக்கொண்டு அவர்கள் மீதுகுற்றம்சுமத்திக்கொண்டு கேவலமான வேலைகளை சரத் வீரசேகர போன்றவர்கள் செய்கின்றனர். இந்த வேலையைஇவர்கள்நிறுத்த வேண்டும். இவர்களால் கடந்த அரசு ஏற்கவே பாடம் கற்றுள்ளது. ஆளும் கட்சியிலிருந்தால் அரசை ஆதரித்து பேச வேண்டும். எதிர்கட்சியிலிருந்தால்அரசை எதிர்த்து பேச வேண்டும். இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு நாம் ஆளும் கட்சியில்இருந்தாலும்ஆளும் கட்சிக்கு சார்பானவர்கள் அல்லர்.

அதற்காக எதிர்கட்சிக்கும் ஆதரவானவர்கள் அல்லர். எமக்கு வாக்களித்த மக்களுக்கும்இந்தநாட்டுமக்களுக்கும் நாம் ஆதரவானவர்கள். - என்றார். (05)

## முன்னாயத்த கலந்துரையாடல்



மலையகத் தமிழ் மக்கள் இலங்கையை வந்தடைந்த 200ஆவது ஆண்டினை நினைவுகூரும் வகையில் மலையகச் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்துவரும் தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையான நடைபவனிக்கு யாழ்ப்பாண மக்களின் பங்குபற்றுதலும், ஆதரவு தெரிவித்தலும் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்தியகல்லூரிக்கு அருகாமையில்உள்ளதந்தைசெல்வாகலையரங்கில் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்பு மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மலையக மக்களின் பிரதிநிதியாக சமூக செயற்பாட்டாளர் சட்டத்தரணி பா.கௌதமன் கலந்துகொண்டார்.

## துன்னாலையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் தாம் ஒருவரைக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்..

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலை பகுதியைச்சேர்ந்த 43 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். கைதானவரிடமிருந்து ஒரு கிராம் 960 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டது. விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபரை பருத்தித்துறை நீதிவான்நீதிமன்றத்தில்முற்படுத்தபொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## போதைக்கு அடிமையான இளைஞன் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்துக்கு

### மல்லாகம் நீதிமன்று உத்தரவு

போதைக்கு அடிமையான மானிப்பாய் இளைஞனை கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்புமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில்கடந்தபுதன்கிழமை போதைப்பொருளுடன் கைதான 22 வயதான மானிப்பாய் பகுதி இளைஞனை பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை முற்படுத்தியிருந்தனர்.

அதனைதொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் இளைஞன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என கண்டறியப்பட்டதை அடுத்து குறித்த இளைஞனை பொலன்னறுவை கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பாக்குநீரிணை ஊடாக நில இணைப்பை ஏற்படுத்தும் திட்டம் இந்திய இலங்கைத் தலைவர்கள் சந்திப்பின் பின்னர் தகவல்



இந்தியாவும் இலங்கையும் தங்களுக்கிடையில் நில இணைப்பை உருவாக்குவது தொடர்பில் ஆராய்வதற்கு வெள்ளிக்கிழமை இணங்கியுள்ளன.

இந்தியாவும் இலங்கையும் தங்களுக்கிடையில் நிலதொடர்பை ஏற்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு இணங்கியுள்ளதாக தெரிவித்துள்ளன. இலங்கை ஜனாதிபதியின் பிராந்திய வல்லர சிற்கான விஜயத்தின் போது இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில்சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

பாக்குநீரிணை ஊடாக நில இணைப்பை ஏற்படுத்துவது திருகோணமலை கொழும்பு போன்றவற்றை இந்தியா சென்றடைவதை இலகுவாக்கலாம் மில்லேனியம் வருட உறவுகளை வலுப்படுத்தலாம் என இரண்டு தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள மூலோபாய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைப்பாலம் மற் றும் பெற்றோலிய குழாய்களுக்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வுகள் இடம் பெறும் என இந்திய பிரதமர் நரேந்திரமோடி பேச்சுகளின் பின்னர் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்ட முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அவருக்கு முன்னர் ஜனாதிபதியாகப் பதவிவகித்தவர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட நிலையில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஒருவருடகாலத்தின் பின்னர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உணவு எரிபொருள் மருந்துபோன்றவற்றுக்கான தட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை கடந்த வருடம் நாளாந்த ஆர்ப்பாட்டங்களை எதிர்கொண்டது. இலங்கை தனது 4.6 பில்லியன் டொலர் கடனை செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட போதிலும் இந்தியா 4 பில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியது.

இலங்கை கடந்தவருடம் பல சவால்களை எதிர் கொண்டது. ஆனால் நாங்கள் இலங்கை மக்களுடன் நெருங்கிய நண்பனை போல தோளோடு தோள் நின்றோம் என மோடி தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதியுடனான பேச்சுகளில் சீனாவின் பிரசன்னம் குறித்த கரிசனையும் வெளியிடப்பட்டது என இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் தெரிவித்தார். இந்தியா இலங்கையை தனது கொல்லைப்புறமாக கருதுவதுடன் இலங்கையிலும் பிராந்தியத்திலும் சீனாவின் பிரசன்னம் குறித்து இந்திய அதிகாரிகள் அச்சமடைந்துள்ளனர்.

இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய நாடாக சீனா காணப்படுகின்றது - இலங்கையால் மிகப்பெரிய கடனை சீனாவிற்கு திருப்பி செலுத்த முடியாத நிலையேற்பட்டதை தொடர்ந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனம் 99 வருட குத்தகை;கு எடுத்தது.

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் 1.4 பில்லியன் டொலர் திட்டத்தினை சீனா முன்னெடுத்துள்ளது - இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய வெளிநாட்டு முதலீடு இது - சீனா இதனை தனது வேவுநடவடிக்கைகளிற்கு பயன்படுத்தலாம் என இந்தியா அச்சமடைந்துள்ளது. (05)

# பொருளாதாரத்தின் மீட்சியை நோக்கிய பயணத்தை இலங்கை தொடரவேண்டும்

## ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் வலியுறுத்தல்

இலங்கையின் பொருளாதார நிலைவரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது ஓரளவுக்கு முன்னேற்றமடைந்திருந்தாலும் இன்னமும் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், பொருளாதார மீட்சியை நோக்கிய பயணத்தை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் வங்கிக்கற்கைகளுக்கான நிலையம் மற்றும் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் என்பன இணைந்து ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரகத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டு பெரும்பாகப் பொருளாதாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கான கற்கைநெறியொன்றை முன்னெடுத்திருந்தன. அக்கற்கைநெறியை பூர்த்திசெய்த ஊடகவியலாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து பத்திரிகை ஸ்தாபனத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்திட்டம் பொருளாதாரம் மற்றும் நிதியியல் விவகாரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்புச்செய்திருப்பதுடன் அரசாங்கத்துக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

அத்தோடு கடந்த ஆண்டு இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்ததாகவும், கடன்களை மீளச் செலுத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர், தற்போது பொருளாதார நிலைவரம் ஓரளவுக்கு முன்னேற்றமடைந்திருந்தாலும் இன்னமும் பல சவால்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்தார். குறிப்பாக அண்மையகாலங்களில் பதிவாகிவரும் பெருமளவான மனிதவள வெளியேற்றம் தொடர்பில் பிரஸ்தாபித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், பொருளாதார மீட்சி என்பது இலகுவானதல்ல என்றும் அதனை முன்னிறுத்திய பயணத்தை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதேவேளை இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இலங்கையைப் பொறுத்தமட்டில் எழுத்தறிவு வீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகின்ற போதிலும், கடந்தகால ஆய்வுகளின்படி பொருளாதார மற்றும் நிதியியல்விடயங்கள் தொடர்பான அறிவு மிகக்குறைவான மட்டத்திலேயே இருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார். அதன் விளைவாகவே 'பிரமிட் திட்டம்' போன்ற பல்வேறு திட்டங்களின் ஊடாக நிதிமோசடிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், அவற்றால் பலர் பாதிக்கப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்ட ஆளுநர், நாடாளுமன்றத்தில் மத்திய வங்கிச்சட்டமூலம் தொடர்பான விவாதம் இடம் பெற்றபோது, அதில் பலர் அவசியமான விடயங்கள் தொடர்பில் பேசவில்லை என்பதை ஓர் உதாரணமாகச் சுட்டிக்காட்டினார். எனவே, இத்தகைய கற்கைநெறிகள் மூலம் ஊடகவியலாளர்களுக்கும் மத்திய வங்கியின் பொருளியலாளர்களுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்தப்படுவதும், பொருளாதார விவகாரங்கள் குறித்த ஊடகவியலாளர்களின் அறிவு மேம்படுத்தப்படுவதும் சமூகத்துக்கு நன்மைபயக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் நிகழ்வில் உரையாற்றிய இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைவர் குமார் நடேசன், ஊடகம் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சுட்டிக்காட்டியதுடன் ஊடகவியலாளர்கள் செய்திகளை எழுதும்போது மிகச்சரியான தன்மை, சுயாதீனத்துவம், பக்கச்சார்பற்ற தன்மை, மனிதாபிமானம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய ஐந்து பிரதான கூறுகளை மனதிலிருத்திச்செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார். (05)

# இலவச மருத்துவசேவை அச்சுறுத்தலில்

# வைத்தியசாலைகளுக்குச் செல்வோரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



இலவசமருத்துவசேவை பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. வைத்தியசாலைகளுக்கு செல்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை காணப்படுகிறது.

எதிர்வரும் நாள்களில் சுகாதாரத்துறை அமைச்சர் நல்லவர் என மலர்சாலை உரிமையாளர் சங்கத்தினர் குறிப்பிடுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான விவாதத்தின் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தேசிய கடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து வங்கி வணிக கடன்களின் வட்டி வீதம் குறைவடையும் என அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை எந்த வட்டியும் குறைவடையவில்லை. நாட்டு மக்களுக்கு பொய்யுரைத்து இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு சென்றுள்ளார். எதை விற்பார் என்பதை அறியவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆகவே, ஜனாதிபதி நாட்டுக்கு வந்ததன் பின்னரே இந்தியாவுக்கு எது விற்கப்பட்டது என்பதை அறிய முடியும். ஜனநாயகத்தையும், நாடாளுமன்றத்தையும் புறக்கணித்து செயற்பட நினைத்தால் அது பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. நாட்டுக்கு புதிதாக ஒரு முதலீடும் வருகை தரவில்லை. கடன் பெறுவது, இருக்கும் வளங்களை விற்பது இதுவே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாகக் காணப்படுகிறது.

தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த அரசாங்கம் எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். எந்த திட்டங்களையும் ஆரம்பிக்காமல் கடன்பெறும் திட்டங்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவது.

டெலிகொம் நிறுவனத்தின் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய பல பங்குகளை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் எதிர்ப்பு தெரிவித்ததுடன் வட்டமேசை கூட்ட சூழ்ச்சியுடன் அவர் பதவி நீக்கப்பட்டார்.

அரசாங்கத்துக்கு சார்பான ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். இவ்வாறான நிலையில் தான் அரசாங்கம் செயற்படுகிறது.

சுகாதாரத்துறை பல நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. தரமற்ற மருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு செல்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. எதிர்வரும் நான்களில் இலங்கையின் சுகாதாரத் துறை அமைச்சர் நல்லவர் என மலர்சாலை உரிமையாளர் சங்கத்தினர் குறிப்பிடுவார்கள். அரச கட்டமைப்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் ஒருபோதும் முன்னேற்ற முடியாது. - என்றார். (05)

# முறைப்பாடளிக்க பொலிஸ் நிலையம் சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யச் சென்ற ஒருவர் மயங்கிவீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் யாழ்ப்பாண மருத்துவமனை வீதியைச் சேர்ந்த எஸ்.ஹரிசந்திரன் (வயது 66) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றார். அந்தப் பகுதியிலுள்ள கருவாட்டுக் கடைக்காரருக்குப் பணம் கடனாகக் கொடுத்தார் எனவும், பணத்தை மீளக் கேட்டபோது, தகராறு ஏற்பட்டுக் கருவாட்டுக் கடைக்காரர் தன்னைத்தாக்கினார் எனவும் முறைப்பாடு வழங்குவதற்காகவே அவர் பொலிஸ் நிலையம் சென்றிருந்தார்.

அங்கு அவருக்கு மயக்கம் ஏற்பட்டு நிலத்தில் விழுந்துள்ளார். அவரது உயிர் அங்கேயே பிரிந்தது.

அவருடன் முரண்பட்டுத் தாக்கினார் எனக் குற்றஞ்சாட்டப்படும் கருவாட்டுக் கடைக்காரரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (02)

# தங்கையின் தலைமுடியை கத்தரித்த அக்கா தங்க நகை கொடுக்கல் வாங்கலில் சம்பவம்

தனது தலைமுடியைச் சொந்த அக்காவே கத்தரித்துவிட்டார் என்று தங்கை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தான் அவரது தங்கச் சங்கிலியை ஏமாற்றி அபகரித்து விட்டார் என்று கோபடைந்தே இவ்வாறு தலைமுடியைக் கத்தரித்துவிட்டார் என்றும் அந்த முறைப்பாட்டில் தங்கை தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டம் அளவெட்டி பொலிஸ் பிரிவில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது:

கனடாவில் வசிக்கும் பெண்ணொருவர் அளவெட்டியில் உள்ள தனது தாய் வீட்டுக்கு சில தினங்களுக்கு முன்னர் குடும்பத்தோடு வந்து தங்கியுள்ளார்.

வீட்டிற்கு வந்தவர் தனது தாலிக்கொடி மற்றும் தங்கச் சங்கிலி என்பவற்றைத் தங்கையிடம் பாதுகாப்பாக வைக்குமாறு கொடுத்துள்ளார்.

வெள்ளிக்கிழமை தான் கொடுத்த நகைகளை தருமாறு வெள்ளிக்கிழமை தங்கையிடம் கோரியுள்ளார் அக்கா. தங்கை தாலிக் கொடியை மாத்திரமே கையளித்துள்ளார்.

சங்கிலி தொடர்பில் கேட்டபோது தாலிக்கொடி மாத்திரமே தன்னிடம் தரப்பட்டதாகக் கூறியுள்ளார்.

அதனால் அக்கா-தங்கை மத்தியில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு குடும்பி பிடி சண்டையாக மாறியுள்ளது. இந்தச் சண்டையிலேயே தங்கையின் முடியை அக்கா கத்தரித்துள்ளார். கத்தரிக்கப்பட்ட தனது தலை முடியுடன் பொலிஸ் நிலையம் சென்ற தங்கை, தனது அக்கா மீது முறைப் பாடு செய்தார்.



# கஞ்சா பயிர்ச் செய்கை செயற்திட்டத்தை தொடங்க முட்டிமோதும் முதலீட்டாளர்கள்

## அமைச்சர் திலும் அமுனுகம கூறுகிறார்



நாட்டில் கஞ்சா பயிர் செய்கை செயற்திட்டத்தை ஆரம்பிக்க சுமார் 150 வெளிநாட்டு முதலீட்டாளர்களது திட்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என பதில் அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டிருந்த முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் திலும் அமுனுகம, இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து வகையான முதலீட்டையும் உள்ளடக்கும் வகையில் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த சட்டங்களைக் கொண்டுவரும் போது, ஏனைய அரச நிறுவனங்களின் தற்போதைய சட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலீடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ள தற்போதைய சட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக 7 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேநேரம், கஞ்சா பயிர் செய்கை செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக சுமார் 150 வெளிநாட்டு முதலீட்டாளர்களது திட்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என பதில் அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மருந்துதயாரிப்புக்காக மாத்திரம் கஞ்சா பயிர் செய்கை திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன் முதற்கட்ட செயற்திட்டத்தை இந்த வருடத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சரத் வீரசேகரவும் ஜயந்தவும் அரசியல் மனநோயாளிகள்!

## ரவிகரன் சாட்டை



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் இருந்த தமிழர்களின் பூர்வீகத் தொல்லியல் வழிபாட்டு அடையாளங்களை காணாமலாக்கிவிட்டு, அதன்மேல் பௌத்த வரலாறுகளை எழுதி குருந்தூர்மலையை பௌத்த தொல்லியல் இடமாக்கும் திட்டமிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச்செயற்பாட்டை ஒருபோதும்ஏறுக்கொள்ளமுடியாதென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடுநாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த சமரவீரமற்றும்,சரத்வீரசேகர ஆகியோர் தெற்கிலுள்ள பெரும்பாண்மையின மக்களின் மன நிலையைக் குழப்பி, இனவாதத்தைத் தூண்டி அரசியலில் ஈடுபடும் அரசியல் நோயாளிகள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே இவ்வாறானஅரசியல்நோயாளிகளை பெரும்பாண்மையின மக்கள் அரசியலில் இருந்துஓரங்கட்டவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு குருந்தூர்மலையை, பௌத்த தொல்பொருள் சின்னமாகபிரகடனப்படுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்திருக்கின்றமை மிகவும் வேடிக்கையானது. குருந்தூர்மலையும், குருந்தூர்மலை அமைந்துள்ள தண்ணிமுறிப்புக் கிராமமும் தமிழ் மக்களுக்குரியவையாகும்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, பகுதி சைவத் தமிழ் மக்களின் பூர்வீகக் கிராமமாகும்.

அங்கு பரம்பரை பரம்பரையாக சைவத் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்தனர்.

தண்ணிமுறிப்பில் வாழ்ந்த பூர்வீகத் தமிழ் மக்கள் பாரிய அளவில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், கால்நடை வளர்பு போன்ற தொழில் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டு வந்துள்ளனர்.

அதுமாத்திரமின்றிதேன் எடுத்தல், மிருகங்களை வேட்டையாடுதல் உள்ளிட்ட செயற்பாடுகளிலும் இங்குவாழ்ந்த பூர்வீக தமிழர்கள் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இவ்வாறாக இந்த தண்ணிமுறிப்பில் வாழ்ந்த பூர்வீகத் தமிழ் மக்கள் நெல் மற்றும், சிறுதானியங்களுடனும், பால், தயிர், நெய், தேன், இறைச்சி, என்பவற்றோடு பாலை, வீரை, முரளி உள்ளிட்ட காட்டுப் பழங்களை உணவுகளாக உட்கொண்டு தன்னிறைவாக வாழ்ந்துவந்துள்ளனர்.

இந்த தண்ணிமுறிப்பு கிராமத்தைதழுவி 'நிலக்கிளி' எனும் நாவல் இலக்கியம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

குறித்த நாவலை அண்ணாமலை பாலமனோகரன் என்னும் எழுத்தாளர் எழுதியுள்ளார்.

இங்கு வாழ்ந்த பூர்வீகத் தமிழ்மக்களின்வாழ்வியலை நிலக்கிளி நாவல்தெளிவாகக் கூறுகின்றது.

அந்தநாவலில்கூடஎமது தமிழ் மக்கள் குருந்தூர்மலையில்சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சைவவழிபாட்டுஅடையாளமான சூலம் இருந்ததாகவும் குறித்த நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த 1984 ஆம் ஆண்டு இந்த தண்ணிமுறிப்பு பகுதியில் வாழ்த்த சைவத் தமிழ் மக்கள், அப்போது நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர்.

குறிப்பாக 1984 ஆம் ஆண்டுமுல்லைத்தீவுமாவட்டத்தில் தண்ணிமுறிப்பின் அயற்கிராமமான ஆண்டான் குளம் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, ஒதியமலை உள்ளிட்ட பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள்கூட இடப்பெயர்வைச் சந்தித்திருந்தனர்.

இவ்வாறு இடப்பெயர்வைச்சந்தித்த தமிழர் பூர்வீகக் கிராமங்களில், குருந்தூர்மலை அமைந்துள்ள தண்ணிமுறிப்புக் கிராமம், அதேபோல அதன் அயற்கிராமமான ஆண்டான்குளம் ஆகிய தமிழர்பூர்வீகக்கிராமங்களே இதுவரையில் மீள் குடியமர்த்தப்படவில்லை.

குறித்த கிராமங்களைச் சேர்ந்தமக்கள்பலதடவைகள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துமாறு கோரியும் இதுவரை மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை.

இவ்வாறுஅங்குவாழ்ந்த பூர்வீகத்தமிழ் மக்களை மீள்குடியேற்றம்செய்யாமல், திட்டமிட்டுகட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வேலைகளை செய்துவருகின்றனர்.

திட்டமிட்ட வகையிலே அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள்மீள்குடியேற்றம்செய்யப்படவில்லை என்பதுடன், தண்ணிமறிப்பு பாடசாலை தற்போது பூதன்வயல் கிராமத்தில் இயங்கி வருகின்றது.

இவ்வாறான சூழலில் தொல்லியல்அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து எம்மை குருந்தூர் மலைப் பகுதிகுள் போகவிடாமல் தடுத்து, அங்கிருந்த சைவ வழிபாட்டு அடையாளமான திரிசூலத்தையும், முன்னேஇருந்தகல்லையும் காணாமல் ஆக்கியுள்ளனர்.

அத்தோடுஅங்குபுதிதாக பாரிய அளவில் விகாரை ஒன்று நிறுவப்பட்டது.

இவ்வாறுதமிழர்களின் பூர்வீக குருந்தூர்மலையில் விகாரையை அடாத்தாக அமைத்துவிட்டு, அதை பௌத்த சின்னமாக அறிவிக்கக் கோருவது மிகவும் அபத்தமானது.

மேலும் அங்கே அகழ்வாய்வுகளின்போது சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டிருந்தது. அவ்வாறு அகழ்வாய்வுகளில் பெறப்பட்ட சிவலிங்கம் எட்டுப் பட்டைகொண்ட எண்முகத் தாராலிங்கம் என பல ஆய்வாளர்களாலும் சொல்லப்பட்டது.

குறித்த சிவலிங்கம் பல்லவர்காலத்துக்குரியதாக இருக்கலாம் எனவும் ஆய்வாளர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில்அவ்வாறு பெறப்பட்ட சிவலிங்கத்தை எடுத்து தற்போது பௌத்த விகாரையின் உச்சிப் பகுதியில் வைத்துள்ளனர். குறித்த சிவலிங்கத்தை விகாரையின் ஒரு பாகமாக சித்திரித்துள்ளனர்.

இப்படியாக அங்கு திட்டமிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புச்செயற்பாடுகள் கட்டங்கட்டமாகநகர்த்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு எமது தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு பாரியதொரு இன அழிப்பை மேற்கொண்டது. தற்போது எமதுதமிழர்களின் பூர்வீகம், இருப்பு, பண்பாடு, பாரம்பரியம், என்பவற்றைக் கேள்விக்குள்ளாக்குகின்ற விதத்தில்திட்டமிட்டுகட்டமைக்கப்பட்ட இன அழிப்பை இலங்கை அரசாங்கமும், பௌத்த சிங்கள பெருந்தேசியமும் இணைந்து முன்னெடுத்துள்ளன.

குருந்தூர்மலை விவகாரத்தில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வேலைகள் கட்டங்கட்டமாக நகர்த்தப்படுவதை எம்மால்உணரமுடிகின்றது.

அந்தவகையில் தண்ணிமுறிப்பில் வாழ்ந்த தமிழ் மக்கள் திட்டமிட்டு மீள்குடியேற்றப்படவில்லை.

தொடர்ந்து குருந்தூர் மலையில் அகழ்வாய்வு என்ற போர்வையில் அங்கிருந்த தமிழர் வழிபாட்டு அடையாளங்கள்காணாமல் ஆக்கப்பட்டன.

அதேவேளை அங்கு புதிதாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டு, பௌத்த வழிபாட்டுஇடத்தைப்போன்று சித்திரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

அங்கு அகழ்வாய்வுகளில் சிவலிங்கம் பெறப்பட்டபோதும் அதை பௌத்த விகாரையின் ஓர் அமைப்பைப் போல சித்திரித்துள்ளனர்.

தொடர்ந்து தண்ணிமுறிப்பு பூர்வீகத் தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகள், தமிழ் மக்களின் விவசாயக் காணிகள் உள்ளடங்கலாக சுமார்632ஏக்கர்காணிகளை விகாரைக்குரிய காணிகளாக அபகரித்துள்ளனர்.

இவ்வாறுபுதிதாகஅமைக்கப்பட்ட விகாரைக்கு கல்வெட்டு ஒன்று அமைக்கப்பட்டு அதில் போலியான வராலாற்றுத் தகவல்கள் எழுதப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் ஜயந்த சமரவீர குருந்தூர்மலையைபௌத்தசின்னமாக அறிவுக்கும்படிகூறுகின்றார்.

இவ்வாறாக எமது தமிழர்களின் பூர்வீக வரலாற்று இடத்தை அத்துமீறி அபகரித்து வைத்துக்கொண்டு, தமிழர்களின் வரலாறுகளை மூடி மறைத்துவிட்டுஅதற்குமேல் பௌத்த வரலாறுகள் இங்கு புதிதாக எழுதப்படுகின்றன.

இதன்மூலம் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாக்கப்படுகின்றது. தமிழர்களான எமக்கு இந்த நாட்டிலேவராறுகள்இல்லை, தமிழர்கள் இந்தநாட்டில் ஏதிலிகளாக வந்தவர்கள் எனக் காட்டுவதற்கு சிங்களம் முயற்சிக்கன்றது.

இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளான எம்மால், சிங்களத்தின் இத்தகைய செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

குருந்தூர்மலையில் பௌத்த வழிபாட்டுத்தலம் இருந்தது என பொய்களைக் கூறும் பௌத்த துறவிகள், சிங்களகடும்போக்காளர்கள், சரத் வீரசேகர மற்றும், இந்த ஜயந்த சமரவீர போன்ற சிங்களஇனவாதிகளாலேயே இங்கு இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குருந்தூர்மலையை பௌத்த சின்னமாக அறிவித்தால் இங்கு இனங்களுக்கிடையில் பாரியபிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இவ்வாறான தான்தோன்றித் தனமான செயற்பாடுகளால்தான் இந்த நாட்டில் கடந்த காலத்தில் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந் நிலையில் அந்த ஆயுதப் போராட்டத்தால் எமது தமிழ் மக்கள் பல உயிர்களைஇழந்துள்ளனர். அவர்களின் அன்றாட வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு நலிவடைந்திருக்கின்ற எமது மக்கள் மீது இவ்வாறான அழுத்தங்களை பிரயோகித்து அவர்களை மீண்டும் ஓர் ஆயுதக் கலாசாரத்துக்குள் தள்ளுவதற்கு இந்த சிங்கள இனவாதிகள் முயற்சிக்கின்றனர்.

தெற்கில் இருக்கின்ற பெரும்பாண்மையின மக்களுக்கு பொய்யான தகவல்களை இந்த இனவாதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21.07.2023 துரைராசா ரவிகரன் உள்ளிட்டவர்கள் குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாடுகளைமேற்கொள்ளவுள்ளனர் என ஜயந்த சமரவீர என்னும் இனவாதி நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் நாம் கடந்த 20.07.2023 குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்வதாகஇருக்கவில்லை. இப்படியிருக்கும்போது தெற்கிலிருக்கின்ற பெரும்பாண்மை இனமக்களை வன்முறைக்குத் தூண்டும் விதமாக அவர் இவ்வாறு போலியான தகவல்களைத் தெரிவித்துவருகின்றார்.

குறிப்பாகசரத் வீரசேகர, ஜயந்த சமரவீர போன்றவர்கள் தெற்கில் தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதற்காக போலியானதும், இனவாதத்தைத் தூண்டும் விதமான கருத்துக்களத் தெரிவித்துவருகின்றனர்.

தொடர்ந்தும் அவர்கள் நாடாளுமன்ற கதிரைகளில் அமரவேண்டுமெனில் இவ்வாறு இனவாதத்தை கக்கவேண்டிய தேவை அவர்களுக்கிருக்கின்றது.

உண்மையில்இவர்கள் தமது அரசியல் இருப்பிற்காக எதையும் செய்யக்கூடிய அரசியல் மனநோயாளிகள் என்றே சொல்லவேண்டும்.

கனேடிய உயர்ஸ்தானிகளை வெளியேற்றச் சொல்வது, முல்லைத்தீவு தமிழ்நீதிபதியைவிமர்சிப்பது, கனேடியஉயர்ஸ்தானிகரை சந்தித்தவர்களை இந்த நாட்டிலிருந்து நீக்கச் சொல்வதுஉள்ளிட்டவிடயங்களைப் பார்க்கும்போது, சரத் வீரசேகரவை இந்த அரசியல் மனநோய் எவ்வளவு தூரம் ஆட்கொண்டுள்ளதுஎன்பதை உணர முடிகிறது.

அதேபோலதான் இந்த ஜயந்த சமரவீரவும்நடக்காத ஒன்றைநடந்ததாகச்சொல்லி, தமிழர்களின் தொல்லியல் இடத்தை பௌத்த தொல்லியல் இடமாக அறிவுக்குமாறு கூறி, தெற்கிலுள்ள பெரும்பாண்மைஇனமக்கள் மீதுஇனவாதத்தைவிதைத்து, அப்பாவி சிங்களமக்களிடமிருந்து வாக்குகளை அறுவடைசெய்வதற்கு முயற்சிக்கின்றார். இவ்வாறான அரசியல் மனநோய் உள்ளவர்களைதெற்கிலுள்ள பெரும்பாண்மை மக்கள் இனங்கண்டு, இவர்களை அரசியலில் இருந்து ஓரங்கட்டவேண்டும். தமிழ் மக்களாகிய நாம் எமது பூர்வீக வாழ் விடங்களில், எமது பூர்வீக, பண்பாட்டு, வாழ்வில் அம்சங்களுடன் சிறப்பாக வாழ விரும்புகின்றோமே தவிர, இவ்வாறான இனவாதத்தையோ, பிரிவினையையோ, வன்முறையையோ ஒருபோதும் விரும்பவில்லை. - என்றார். (05)

# சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கருத்துகள் எங்களுடைய இறுதி இலக்கையடைய உரமூட்டும்

## எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு



சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இனவாத கருத்துகள் எங்களுடைய இறுதி இலக்கை அடைவதற்கு உரமூட்டுபவையாக அமையும் என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் சுரேன் இராகவன் போன்றோரின் அண்மைக் கால கருத்துகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சரத் வீரசேகர கடற்படை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். இன்று நேற்று அல்ல தொடர்சியாக ஜெனிவா கூட்டத் தொடர்வரை வந்து இனவாதத்தைக் கக்குவது மட்டுமன்றி தமிழ்மக்களின் போராட்டத்தைப் பற்றி குற்றச்சாட்டு முன்வைப்பவர். அதுமட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக பல சோடிக்கப்பட்ட பொய்களை ஜெனிவாகூட்டத் தொடரில் முன்வைக்கின்ற வேலைகளை செய்தது மாத்திரமல்ல, ஜெனிவா கூட்டத்தொடரில் எங்களுடன் மோதுகின்ற வேலைகள் மற்றும் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர். அதுமட்டுமன்றி தமிழ்நாட்டில் இருந்து வந்த வைகோ போன்ற தலைவர்களுடனும் வாக்குவாதத்தில்ஈடுபட்டநபராவார்.

தற்போது இவர் அமைச்சரில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு கடந்த காலங்களில் குறிப்பாக காலாகாலமாக இனவாதக் கருத்துக்களை கூறிவருபவர்கள் போல் முன்பிருந்தவர்களை விட மிக மோசமாக இனவாதக் கருத்துக்களை கக்கிவருகிற செயற்பாட்டில் சரத்வீரசேகர ஈடுபட்டு வருகிறார்.

இவர் சிங்கள பௌத்த இனவாதமக்களின்உண்மையான முகத்தைக் காட்டி வருகிறார். ஏனையவர்கள் மெழுகு பூசியவர்கள் போல் எங்களை ஏமாற்றப்பார்கிறார்கள். இவ்வாறானவர்களை வைத்துக் கொண்டு நாங்கள் ஒரு நாட்டுக்குள் வாழவேண்டும் என்று எங்களுடைய கட்சிகள் அல்லது தலைவர்கள் நினைப்பது எவ்வாறு?

இனப்படுகொலைகள் படுமோசமாக இடம்பெற்ற பின்னரும்கூட அதற்கான நீதி கிடைக்குமாயின் அதற்காக பொதுசன வாக்கெடுப்பு நடாத்தி அதற்காக செல்லமுடியும் என்பது அவர்களுக்கு தெரியும். இதனை விடுத்து அவர்களிடமிருந்து மயிலே மயிலே இறகுபோடு என்று கேட்டுக் கொண்டிருந்தால் பிரயோசனம்எதுவும்இல்லை.

இதனைபோல்தான் தற்போது சுரேன் இராகவன் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக. மலையகத்தைச் சேர்ந்தவர். அவரும்வெளிநாடுகளில்வாழ்ந்துஇன்று ஒன்றுமில்லாமல்தேசியப் பட்டியல் எம்.பியாக வந்துவிட்டு அவர் பேசும் பேச்சுக்கள், வீறாப்புகளை ஏற்கமுடியாதுள்ளது. அதிலும்சமஷ்டிபெறலாம்என கனவுகாண வேண்டாம் என்றால் நீங்கள் சமஷ்டிதரவில்லை என்று கனவு காண்பீர்கள்என்றால்நாங்கள் சுதந்திர தமிழீழத்தை எடுக்கப்போகின்றோம் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இதனை தவிர இதற்கு வேறு வார்த்தைகள் எம்மிடம் இல்லை. மலையகத்தை பிரதிநித்துவப்படுத்துவதாக கூறிக் கொண்டு அவலமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றமக்களுக்கு உதவிசெய்யவில்லை. தமிழனாக இருந்து கொண்டு பௌத்தத்தில்ஆராட்சிகௌரவ பட்டத்தை பெற்றுவிட்டு அதில் பிழையில்லை ஆனால் எமது மக்களின் அல்லது தான் பிரதிநித்துவப்படுத்தும் மக்களின் வீழ்ச்சியைப் பற்றி கதைக்காது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு ஒத்தூதுகின்றவராக சுரேன் இராகவனும் இணைந்துள்ளார். அதுமட்டுமன்றி சரத்வீரசேகரவின் அணியில் இணைந்து கொள்ளட்டும். இவற்றையெல்லாம் கண்டு ஈழத்தமிழர்கள் அச்சப்பட போவதில்லை. பயப்படபோவதில்லை இவர்களுடைய இனவாத கருத்துகள் எங்களுடயை இறுதி இலட்சியத்தை அடைவதற்கு உரமூட்டும் என்பதை நம்புகின்றோம். - என்றார். (05)

# விவசாயி கொலை சந்தேகநபர் கைது

வவுனியா, நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் ஒருவரை சுட்டுக் கொன்ற சந்தேகநபர் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டார் என நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை அழகையா மகேஸ்வரன் (வயது - 58) என்பவர் இடியன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

விவசாயியான அவர், தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, பக்கத்து தோட்டத்தில் நின்ற ஒருவருடன் ஏற்பட்ட தகராறையடுத்து இந்த கொலை நடந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவருக்கும், கொலையாளிக்குமிடையில் தோட்ட எல்லை தொடர்பாக நீண்டகாலமாக முறுகல் காணப்படுகிறது.

வெள்ளிக்கிழமையும் முறுகல் ஏற்பட்டுள்ளது. அப்போது, மகேஸ்வரன் மீது கொலையாளி கல் வீசி தாக்கியுள்ளார். இதனால் கோபமடைந்த மகேஸ்வரன், மண்வெட்டியை எடுத்துக் கொண்டு விரட்டிச் சென்றுள்ளார். தப்பியோடியவர் பக்கத்திலுள்ள தனது வீட்டுக்கு சென்று, அங்கிருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து வந்து சுட்டதில், மகேஸ்வரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இருவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள். அதில், மகேஸ்வரன் யுத்தத்தின் பின் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

39 வயதான கொலையாளி ஒன்றரை வருடமளவில் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தவர், யுத்தம் முடிவதற்கு முன்னரே அந்த அமைப்பை விட்டு விலகி விட்டார்.

அவர் மீது சுமார் 5 வரையான வழக்குகள் உள்ளன. கடந்த வாரம் சட்டவிரோதமாக இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். 20ஆம் திகதிவவுனியாநீதிமன்றத்தால் அவருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினமே தண்டப்பணத்தை செலுத்தி விட்டுவந்து, மற்றொருஇடியன் துப்பாக்கியை பெற்று அதன் மூலமே சூடு நடத்தியுள்ளார் என அறிய முடிகிறது. (05)

# ஆசிரியருக்கு பிணை

தனியார் வகுப்புக்களில் கலந்துகொண்ட மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய ஆசிரியருக்கு களுத்துறை பிராதானநீதிவான்நீதிமன்றம்வெள்ளிக்கிழமை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

களுத்துறையைச் சேர்ந்த 30 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் தனியார் வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு 2 மாதங்களும் 10 நாள்களும்விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த நிலையில், களுத்துறை பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதிமன்றம் அவரை 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுதலை செய்து உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்குரஸ்ஸவில் மரம் வீழ்ந்து இருவர் பலி; மூவர் படுகாயம்

அக்குரஸ்ஸ அமலகொட சந்தியில் பாரிய மரமொன்று வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனம் பழுதுபார்ப்பதற்காக வந்தவர்களே இவ்வாறு மரம் வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர்.

அப்பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக குறித்த மரம் முறிந்து வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 23th July 2023

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## My Family



**Read the story then answer the questions.**

This is my family. It has four people and three animals in it. My brother is younger than me and he has brown hair. My dad has brown hair too. My mum has black hair and is holding my hand. We have two dogs, a big one and a small one. We also have one cat who is grey and white. We all like going for walks in the countryside.

**Can you answer the questions?**

1. Who is the narrator? (The one telling the story)
----------------------------------------------------------
2. What colour is the cat?
----------------------------------------------------------
3. What is the difference between the dogs?
------------------------------------------------------------
4. Why do you think they like going for walks in the country?
------------------------------------------------------------

## Going Fishing



**Read the story then answer the questions.**

I love to go fishing. I like to sit by the lake in the sun. I have a long fishing rod and a hook on the end of it. I have to put some food on the end of the hook. If the fish like the food they will bite it and I can catch them. If I catch a fish I can take it home to eat for dinner. I don't catch fish every time I go to the lake, but that is ok it is still fun to try. At the weekend my dad comes fishing with me, he can catch a lot of fish!

**Can you answer the questions in full sentences?**

1. What do you need to go fishing?
----------------------------------------------------------
2. What does he do with the fish he catches?
----------------------------------------------------------
3. Who goes fishing with him on Saturday and Sunday?
----------------------------------------------------------
4. Why do you put food on the end of the hook?
----------------------------------------------------------

## The New Theme Park



**Read the story then answer the questions.**

There is a new theme park next to town. We go there on the first day of the holidays. It has lots of rides to try. Some rides are scary, but we love them. There are lots of people here. There are snack shops too. We eat popcorn and hotdogs. Then we go on a fast ride. We feel a little sick after that! We all love the new theme park.

**Can you answer the questions?**

1. When did they go to the theme park?
----------------------------------------------------------
2. What did they eat at the theme park?
----------------------------------------------------------
3. Why do you think they feel a little sick?
----------------------------------------------------------

## Planting a tree



**Read the story then answer the questions.**

We had a lot of fun at school today. Our teacher had arranged for a forest ranger to come to class. A forest ranger is a person who takes care of the trees and wildlife in the forest. Today, he came to teach us how to plant trees and how that helps to keep air clean all over the world. After the lesson we all went out side to learn how to plant five trees in the school garden. We were lucky to have a garden in our school, and now we are lucky to have 5 new trees to take care of.

**Can you answer the questions**

1. Who came to the school today?
----------------------------------------------------------
2. What does a forest ranger do?
----------------------------------------------------------
3. How many trees did they plant in the school?
----------------------------------------------------------

# Jaffna University confers degrees on Tamil artistes



The Jaffna University created history last weekend by conferring Honorary Doctorates of Philosophy posthumously on two world-renowned artistes, Nathaswaram Vidwan Mr. N.K.Pathmanathan of Alaveddy and Dramatist Nadikamani V. V.Vairamuthu of Kankesanthurai. The Chancellor Professor M.Sivasooriya conferred the titles on them at the twenty-third convocation of the university held Saturday at the Kailasapathy Auditorium.

Professor S.K.Sitrampalam, Dean of the Post Graduates Faculty delivered the introductory address on the recipient Alaveddy N.K.Pathmanathan and Professor P.Gopalakrishnan Ayer on Nadikamani V.V.Vairamuthu, sources said.

Mr. N.K.Pathmanathan was born in 1932 at Alaveddy north in Jaffna. His father, late Mr. Kanthasamy was a leading Thavil (Drum) Vidwan in early days. Mr.Pathmanathan studied Nathaswaram music under his father. Thereafter he became a student of another Nathaswaram Vidwan Kondavil Mr.M.P.M.Thirunavukkarasu.

He held his Nathaswaram recitals in many parts of the world including London, Germany, France, Singapore, Malaysia, Canada, Australia and India. He was conferred with the title "Nathaswaram Isai Chakravarthi" (Emperor of Nathaswaram Music) by several musical organizations. He was holding the post of Asthana Nathaswaram Vidwan of the historic Nallur Kandasamy Temple for over forty-one years.

Recognizing his contribution to the development of Nathaswaram music, the Government of Sri Lanka conferred on him the title "Kalasuri". He was the first Nathaswaram Vidwan who was conferred with the State Award, sources said.

**Jaffna University Convocation**

"Nadikamani" Vairamuthu was born on 11th February 1924 in Kankesanthurai. He learnt Carnatic music under the able guidance of Vidwan Chellapapillai in Madurai from 1941 to 1942. He became a Tamil Pundit passing Pundit examination held by Madurai Tamil Sangam. He underwent training in Madurai in Tamil theatre under the guidance of Mr.Karunalaya Bagavathar. He returned to Jaffna as a well-qualified musician and theatre artiste. Mr.Vairamuthu staged several Tamil plays and became an exponent in producing Tamil plays based on Tamil literature.

His play "Mayana Kandam" is still remembered in the Tamil literary world as a masterpiece. This play was staged more than three thousand times due to repeated requests from the Tamil activists. The title "Nadikamani" was conferred on him for the success he achieved in Tamil theater.

He began his career as a teacher but later resigned from the profession and dedicated himself completely for the development of Tamil theater. The title " Nadaka Chakravarthi" was conferred on Mr. Vairamuthu by late professor S.Vithiyananthan in 1982 at an event in Colombo when he staged his masterpiece "Mayana Kandam" for the 2501st time.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2023இல் வெளியிடப்பெற்றது.